புதன்பொய்கை

# உதயன்

சுடர் : 40
கதிர் : 357

புதன்கிழமை
19 நவம்பர் 2025

கார்த்திகை 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50



## திருகோணமலைச் சம்பவத்தில் அரசியலுக்கு இடமில்லையாம்

### அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19
திருகோணமலை சம்பவத்தை அடிப்படையாக வைத்து அரசியல் செய்வதற்கு இடமில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். 15

### திருகோணமலை புத்தர்சிலை விவகாரம்

# சிங்கள இனவெறி ஆதிக்கத்தை மீண்டும் நிறுவுவதற்குத் திட்டம்!

### தொல்.திருமாவளவன் கண்டனம்

### சமஷ்டியே தீர்வு என்றும் அழுத்தம்



சென்னை, நவம்பர் 19
தமிழர் பகுதியில் மீண்டும் சிங்கள பேரினவாத ஆட்சியை ஏற்படுத்துவதற்கான செயலாகவே திருகோணமலையில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை விவகாரத்தைப் பார்க்க வேண்டியுள்ளது என்று தமிழகத்தின் அரசியற் தலைவர்களில் ஒருவரான தொல். திருமாவளவன் கண்டித்துள்ளார். 15

### மாவீரர் நிகழ்வுகளின்போது

## அஞ்சலிப்பு எல்லைமீறின் கடும் நடவடிக்கை பாயும்

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19
உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரும் போர்வையில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் 15

## வடக்குக் காணி விடுவிப்பில் பாதுகாப்புக்கே முன்னுரிமை

### பிரதான எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, நவ. 19
வடமாகாணத்தில் காணிகள்விடுவிக்கப்படும்போது தேசியப் பாதுகாப்புக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
நாடாளுமன்றத்தில் நேற்று 15

## திருகோணமலையில் புத்தர்சிலை; நாமலை ஆட்சியில் அமர்த்தச் சதி!

### ராஜாங்கனை சத்தா ரதன தேரர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 19
நாமல் ராஜபக்ச எனும் திருடனை நாட்டின் ஜனாதிபதியாக மாற்றவே திருகோணமலையில் அடாத்தாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. உண்மையில் அந்தப் புத்தர் சிலை அவசியமற்றது - இவ் 15

### காற்றாலைக்கு எதிரான போராட்டம்

## வழக்குத் தொடரப்பட்டோரை விடுவிக்குமாறு கோரிக்கை!

### அறிக்கை வழங்குமாறு பொலிஸாருக்கு உத்தரவு

மன்னார், நவ. 19
மன்னாரில் காற்றாலைத் திட்டத்துக்கு எதிராகப் போராடியவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் இருந்து, குற்றஞ்சாட்டப்பட்டோரை விடுவிக்குமாறு நீதிமன்றத்தில் நேற்றுக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மன்னாரில் 14 காற்றாலைகளை அமைக்கும் திட்டத்தை எதிர்த்து மக்கள் அண் 15



## வங்குரோத்து அடைந்த தரப்புகள் இனவாதத்தைத் தூண்ட முயற்சி!

### ஜனாதிபதி அநுர குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 19
அரசியல் வங்ரோத்து அடைந்த தரப்புகள் நாட்டில் மீண்டும் இனவாதத்தை ஏற்படுத்தி குளிர்காய்வதற்கு விரும்புகின்றனர் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
திருகோணமலையில் நடந்த சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர் 15

### யாழ்ப்பாணத்தில்

## பதிவுகள் இல்லாமல் முதியோர் இல்லங்கள்

### மாவட்டச்செயலர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 19
யாழ்ப்பாணத்தில் மூன்று முதியோர் பராமரிப்பு நிலையங்கள் இதுவரை எந்தவிதமான பதிவுகளையும் மேற்கொள்ளாமல் இயங்கி வருகின்றன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.
முதியோர் பராமரிப்புச் சேவை தொடர்பான மூன்றுநாள் பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வு நேற் 15



## மன்னார் கடற்கரைகளில் மீண்டும் பிளாஸ்ரிக் துகள்

மன்னார், நவ. 19
மன்னார் கடற்கரைகளில் அண்மைக்காலமாக மீண்டும் பிளாஸ்ரிக் துகள்கள் கரையொதுங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்து சமுத்திரத்தில் கேரளக் கடற்பரப்புக்கு அருகில் அண்மையில் கப்பலொன்று விபத்துக்கு உள்ளானது. அண்மைக்காலமாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, அந்தக் கப்பலில் இருந்து பிரி 15

முச்சந்தி முரளி

'ஒரேயொரு புத்தர் சிலையால ஒட்டிமொத்த நாடே கலங்கிப் போயிருக்குது கண்டியளோ'

## மன்னார் நகரசபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

விரிவு பக்கம்:-07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 18.11.2025 | 4285 | M | 19 30 31 40 | விசேட எழுத்து M |
| ஹந்தஹான ராசி சுப பலன் | 18.11.2025 | 1326 | | 26 32 56 59 | வெற்றி இலக்கினம் மிதுனம் |
| NLB ஜய | 18.11.2025 | 0285 | M | 6 5 8 1 | |
| மெகா பவர் | 18.11.2025 | 2365 | Y | 20 26 56 79 | சுப்பர் இலக்கம் 06 |
| மஹஜன சம்பத | 18.11.2025 | 6017 | E | 4 6 4 6 8 2 | |
| தன நிதானய | 18.11.2025 | 2047 | W | 30 34 55 71 | விசேட எழுத்து W |
| அத சம்பத | 18.11.2025 | 0592 | E | 4 6 8 2 | |
| சுப தவசக் | 18.11.2025 | 0133 | | 11 51 62 | வெற்றி இலக்கினம் தனுசு |

# பேரினவாத அழுத்தத்துக்கு அடிபணிந்தது தே.ம.ச. அரசு

## எம்.ஏ.சுமந்திரன் காட்டம்

**கொழும்பு, நவ.19**

**அமைச்சர் ஆனந்த விஜேபாலவும் தே.ம.ச. அரசும் பேரினவாதச் சக்திகளின் அழுத்தங்களுக்கு கோழைத்தனமாக அடிபணிவதை இலங்கைத் தமிழரசுக் கட்சி கேவலமாகக் காண்கிறது. அருண் ஹேமச்சந்திரா உடனடியாக பதவி விலக வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவரது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அமைச்சரின் கட்டளைப்படி திருகோணமலைக் கடற்கரையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட சிலை பொலிஸாரால் அகற்றப்பட்டபோது, அரசாங்கம் இனவாத எண்ணமில்லாமல் சரியாக நடந்துகொள்கிறது என்று சிலர் நினைத்தார்கள். ஆனால் அப்படியல்ல என்பதை சில மணி நேரத்துக்குள்ளேயே அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

பாதுகாப்புக்காகவே சிலை அகற்றப்பட்டது என்றும், அது மீள நிறுவப்படும் என்றும் வெட்கமில்லாமல் அறிவித்தபோதே சகல மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்ற வாக்குறுதிகாற்றில்பறக்கவிடப்பட்டது. தே. ம. ச. அரசும் முன்னைய அரசுகளைப் போலவே ஒரு இனவாத, சிங்கள பௌத்த பேரினவாத அரசு என்பதை நிறுவியுள்ளது. இந்தக் கட்சியைச் சேர்ந்த அனைத்துத் தமிழ் உறுப்பினர்களும், திருகோணமலை உறுப்பினர் அருண் ஹேமச்சந்திராவும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (எ-27,66)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 18.11.2025 | செவ்வாய்க்கிழமை | 0725 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| X | 7 5 3 0 4 2 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 18.11.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2991 | A | 04 21 35 55 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.11.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 12 21 71 76 | 5152 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 18.11.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0821 | 09 14 40 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.11.2025 | செவ்வாய்க்கிழமை | |
| மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 05 14 48 50 | 4703 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 18.11.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 14 | 01 22 52 64 | 2167 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.11.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 08 33 60 66 | 2817 |



முன்னாள் எம்.பி.க்களின்

# ஓய்வூதியம் இரத்து சட்டமூலம் மன்றுக்கு

கொழும்பு,நவ.19

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்குரிய சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்கா சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-44)

# திருமலைப் பிரச்சினையில் அரசு தலையிட வேண்டும்

## நாமல் ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு, நவ.19

திருகோணமலைப் பிரச்சினையை இனவாதப் பிரச்சினையாக மாற்றுவதற்கு இடமளிக்கக் கூடாது. அரசாங்கம் உடனடியாக தலையிட்டு பேச்சு நடத்தி பிரச்சினையை சுமுகமாக தீர்த்துவைக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திருகோணமலைச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திருகோணமலையில் விகாரைப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. புத்தர் சிலை பாதுகாப்புக்காகவே வெளியில் எடுக்கப்பட்டது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் பொலிஸாரின் தாக்குதலில் இரு பிக்குகள் காயம் அடைந்துள்ளனர்.

இது 1952 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு 2004ஆம்ஆண்டுபுனிதபூமியாக்கப்பட்டுள்ளது. கிழக்கில் பழமையான அறநெறிப் பாடசாலையும் இங்குள்ளது. அதனால் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு பேச்சு நடத்த வேண்டும். இதனை இனவாதப் பிரச்சினையாக மாறுவதற்கு இடமளிக்கக்கூடாது. இரு தரப்பினரையும் அழைத்துப் பேச்சு நடத்தி தீர்வை வழங்க வேண்டும்-என்றார். (எ-44)

# ஹாட்லியின் மைந்தர்களுக்கு கடற்கரையில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,நவ.19

ஹாட்லி கல்லூரி மைந்தர்களின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில், அவர்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களால் நேற்றுமுன்தினம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

அத்துடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீட மாணவனாகக் கல்வி கற்றுவந்தவேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனது 21 ஆவது ஆண்டு நினைவேந்தலும் இடம்பெற்றது. வடமராட்சி இன்பர்சிட்டிக் கடற்கரையில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஹாட்லிக் கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நால்வர் கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-100)



# கோடாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்ப்பாணம் ஏழாலை வடக்குப் பகுதியில் 180 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கசிப்புக் காய்ச்சுவதற்கு வைத்திருந்த கோடாவே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடற்றொழில் அமைச்சருக்கு தீர்வுகாண திராணியில்லை!

## வடமராட்சி மீனவர்கள் விசனம்

**யாழ்ப்பாணம்,நவ.19**

**வடக்கு மாகாண மீனவர்களின் பிரச்சினைக்குக் கடற்றொழில் அமைச்சரால் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் முன்னரை விட இப்போதே வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன என்று வடமராட்சி மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் இல்லாத வகையில் மீனவ சமூகம் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகிறது.

எங்களது பிரச்சினைகள் தொடர்பில் ஒரு தடவையேனும் கடற்றொழில் அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடவில்லை. தேர்தலில் வாக்குப் பெறுவதற்காக மீனவர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்போம் என்று கூறியவர்கள் அதன் பின்னர் இன்று வரை திரும்பியும் பார்க்கவில்லை.

வடக்குக் கடலில் இந்திய மீனவர்கள் எல்லைதாண்டல் அதிகரித்துள்ளது. நாளாந்தம் நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப்படகுகள் படையெடுத்து வருகின்றன.

இதற்குப் பொறுப்பான கடற்றொழில் அமைச்சரே பாராமுகமாக உள்ளபோது கடற்படையினரையோ, அரசாங்கத்தையோ குறைசொல்ல முடியாது. எனவே அவரை மாற்றி மீனவர் பிரச்சினை தொடர்பில் தெரிந்த ஒருவரை அமைச்சராக நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (சு-100)

# எச்.ஐ.வி. தொற்றாளரில் அனேகர் ஆண்கள்

கொழும்பு, நவ.19

இலங்கையில் ஆண்கள் அதிகளவில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும், எச்.ஐ.வி. தொற்று அதிகரித்துள்ளது என்றும் தேசிய பாலியல் தொற்றுகள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டில் பதிவான எச்.ஐ.வி. பாதிப்புகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான விகிதம் 7.6 க்கு 1 என்ற அளவில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு முதல், இலங்கையில் மொத்தம் 6 ஆயிரத்து 759 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 5 ஆயிரத்து 366 பேர் ஆண்களாவர், ஆயிரத்து 573 பேர் பெண்களாவர். (ஏ-இ)

# இலங்கைக்குக் கடத்தவிருந்த ஐஸ் போதைப்பொருள் மீட்பு

சென்னை, நவ.19

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பல கோடி ரூபா மதிப்புள்ள ஒரு கிலோ 500 கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று தமிழகத்தின் இராமநாதபுரம் சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதியில் இருந்து இலங்கைக்குக் கடல் வழியாக ஐஸ் போதைப்பொருள் கடத்தப்படவுள்ளது என்று இராமநாதபுரம் சுங்கத்துறை துணை ஆணையருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மீமிசல் பஸ் நிலையத்தில் இருந்து தொண்டி நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்றை எஸ்.பி.பட்டினம் அருகே சுங்கத்துறை அதிகாரிகள் தடுத்து சோதனையிட்டுள்ளனர். பயணிகள் இருக்கையியின் கீழ் உரிமைகோரப்படாத பை ஒன்றில் இருந்து ஐஸ் போதைப் பொருள மீட்கப்பட்டுள்ளது.

பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்துக்குக் கொண்டுவரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்ளைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-56)



# கட்டாக்காலி நாய்களால் யாழ்.நகரில் தொல்லை!


யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.நகர் உள்ளிட்ட நகரை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் வீதிகளால் பயணிப்போர் அச்சத்துடன் பயணிக்கவேண்டியுள்ளது.

யாழ்.நகர் முற்றவெளி, பண்ணைப்பகுதி மற்றும் கொட்டடிப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் அலைந்து திரிகின்றன.

அதனைவிட நல்லூர், கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய்ப் பிரதேசங்களிலும் இரவு வேளைகளில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. நாய்கள் திடீரென வீதிகளுக்குக் குறுக்கே ஓடுவதால் விபத்துகளும் ஏற்பட்டுள்ளன. எனவே கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு-17)

# சின்ன வெங்காயம் திடீர் விலையுயர்வு



யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சின்ன வெங்காயத்துக்கு திடீர் கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், அதன் விலையும் அதிகரித்துள்ளது.

தற்போது தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறைந்தளவு வெங்காயமே சந்தைக்குக் கிடைப்பதால், அதன் விலை அதிகரித்துள்ளது.

தற்போது சின்னவெங்காயம் ஒரு கிலோ 350 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ 160 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (சு-7)

## உவையள் ஏன் போகேல்லை?

உடையவன் இல்லாட்டி ஒருமுழமும் கட்டைதான். எங்கட இனத்தில இப்ப கனபேர் தாங்கள் தான் மீட்பர்கள், ஏகப்பிரதிநிதியள் எண்டெல்லாம் சொல்லி கொண்டு திரிஞ்சாலும் உருப்படியான வேலையளை அவை செய்யிறேலை. இதுக்கு போன ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில நடந்த புத்தர் சிலைப் பிரச்சினையே நல்ல சாட்சி. எந்தத் திணைக்களங்களின்ர அனுமதியும் இல்லாமல். ஏதோ கனவு கண்டவையைப்போல திடீரெண்டு புத்தர் சிலையொண்டைப் பிக்குகள் வைக்கவெளிக்கிட்டதால திருகோணமலையில கடும் அமளி துமளி. மாநகரசபையின்ர கட்டுப்பாட்டுக்க இருக்கிற அந்த இடத்தில ஏற்கனவே அனுமதியில்லாமல் ஒரு தேத்தண்ணிக்கடை கட்டி,அந்த விசயம் வழக்கில இருக்குது. அப்பிடியிருந்தும் அதுக்குப் பக்கத்தில விகாரை ஒண்டைக் கட்டி, அதில புத்தர் சிலையை வைக்கிறதில பிக்குகள் விடாப்பிடியா இருந்தவை. அவை நினைச்சமாதிரி இப்ப அங்க அந்தச் சிலையை வைச்சும் போட்டினம்,

இப்பிடியொரு பிரச்சினை நடக்குதெண்டால், அந்த இடத்துக்கு முனிசிபல்காரர் போயிருக்கவெல்லோ வேணும். ஏனெண்டால் அவையின்ர கட்டுப்பாட்டுக்க வாற இடத்தில தேத்தண்ணிக்கடையை வைச்சாலென்ன, புத்தரை வைச்சாலென்ன எல்லாத்துக்கும் முனிசிபல்காரரிண்ட அனுமதிதான் முக்கியம். இப்பிடியொரு பெரும் பிரச்சினை நடந்து, சனமெல்லாம் அந்த ஏரியாவில குவிஞ்சுபோய்,எல்லாருமே குழம்பிக்கொண்டு நிக்கேக்க, முனிசிபல் மேயர்,செயலாளர் , மெம்பர்மார் எல்லாரும் சம்பவ இடத்துக்குப் போய், என்ன பிரச்சினை எண்டு பார்த்து தீர்க்கவெல்லோ வேணும். அதுக்குத்தானே அவைக்குச் சனம் வாக்களிச்சு அனுப்பினதுகள். ஆனால் இதுக்கும் தங்களுக்கும் சம்பந்தமே இல்லாத ஆக்கள் மாதிரி அவை எட்டியும் பாக்கேலையாம்.

அதைவிட இன்னொருத்தர் தன்ர காரில அந்த இடத்தை நாலைஞ்சுதரம் ரவுண்டடிச்சுப் போட்டு, இறங்கிக்கூட கேக்காமல் அப்பிடியே போட்டாராம். அவர் வேற ஆருமில்லை, திருகோணமலையில தமிழரக்கள் வீட்டுக்கட்சியில தெரிவுசெய்த ஒரேயொரு எம்.பி. தான் அவர். அந்த எம்.பி.க்கு வயசு போட்டுது தான். இந்த மழைக்காலத்தில இப்பிடியான பிரச்சினையள் நடந்தால் ஓடியாடித் திரிஞ்சு, மழைக்குளிருக்க இறங்கிப் போராட ஏலாதுதான். ஆனால் அதையெல்லாம் அவர் எலக்சன் கேக்கமுதல் தானே யோசிச்சிருக்க வேணும். சும்மா கதிரையில இருந்தபடி அறிக்கை விடுறதுக்காண்டி அவருக்குச் சனம் வாக்களிகேலை. களத்தில இறங்கி தங்களுக்காக குரல் குடுக்க ஒரு பிரதிநிதி வேணும் எண்டுதான் இவருக்கு வாக்களிச்சவை, ஆனால் இவரும் சம்பந்தர் மாதிரி காலில ஊத்தை படாமல் மேட்டுக்குடி அரசியல்தான் செய்யிறாரே தவிர, சனத்திட்ட இறங்கி கதைக்கிறேலை எண்ட குற்றச்சாட்டு கனகாலமா இருக்குது. இந்த வீட்டுக்கட்சி எம்.பி.யும், முனிசிபல் அதிகாரத்தை வைச்சிருக்கிற வீட்டுகட்சிக்காரரும் அண்டைக்கு அந்த இடத்துக்கு வந்து போராடி இருந்தாலே , புத்தர் சிலையை வைக்கவிடாமல் செய்திருக்கலாம். இருந்த இடத்தில இருந்துகொண்டு, அறிக்கை அரசியல் செய்யிற காலம் மலையேறிப்போட்டு கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு வீட்டில் மராமத்துப் பணியின் காரணமாக உடல் அசதி உண்டாகும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். மாலையில் உறவினர்களுடன் தொடர்புகொண்டு பேசி நலம் விசாரிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உடல்நலனில் கவனம் தேவை. உங்கள் தேவையை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும்.

**சிம்மம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்புக் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**கன்னி:** பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பேச்சினால் பிரச்சினை வர வாய்ப்பு உள்ளதால் மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளை அல்லது பெண்ணின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சிலருக்குக் குடும்பம் தொடர்பான வேலையை முன்னிட்டு சற்று அலைச்சல் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். ஆனால், தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு வாழ்க்கைத் துணையுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனாலும் செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். நண்பர்கள் பணஉதவி கேட்டு வருவார்கள்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். நண்பர்கள் தொடர்புகொண்டு மகிழ்ச்சி யான செய்தியை பகிர்ந்துகொள்வர்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அலைச்சல் உண்டாகும்.



# வெள்ளவாய்க்கால் சீரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

தற்போதைய இடர் நிலைமையைக் கருத்திற்கொண்டு, வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையால் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் மானிப்பாய் சந்திக்கு அண்மித்த பகுதியிலுள்ள வெள்ளவாய்க்கால் சீர்செய்யப்பட்டு, வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-17)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை சங்காபிசேகம் இடம்பெற்றது. தொடர்ந்து சுவாமி வீதிவலம் வந்தார். (க-17)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ.19

வல்வெட்டித்துறை இரத்த தானச் சங்கத்தின் 83ஆவது இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற பொது மண்டபத்தில் (மரக்கறிச்சந்தை மேல்மாடி) எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இரத்ததான முகாமில் 18 வயது தொடக்கம் 55 வயதுக்குட்பட்டவர்கள் குருதிக்கொடை வழங்கமுடியும். முன்பதிவுகளுக்கு 0779911131 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளமுடியும் என இரத்ததானச்சங்கத் தலைவர் பா. வீரசுரேந்திரன் தெரிவித்துள்ளார். (ச-41-100)

# சிறுவனுக்கு பாலியல் வன்கொடுமை; சிப்பாய்க்கு கடுழியச் சிறை

கொழும்பு,நவ.19

பத்து வயது சிறுவனைக் கடத்தி பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட சிப்பாய்க்கு 15 வருட கடுழியச் சிறைத் தண்டனை வழங்கி மொனராகலை மேல் நீதிமன்ற நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

33 வயதுடைய முன்னாள் சிப்பாய் ஒருவருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு கிரிக்கெட் விளையாடுவதற்காக வந்த சிறுவனைக் குறித்த இராணுவ வீரர் அருகிலுள்ள முன்பள்ளிக் கட்டடத்துக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி [illegible] தெரியவந்துள்ளது. [illegible]

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 23.02.1955 | | 18.11.2025 |



## தம்பு பாலசுப்பிரமணியம்

(ஓய்வு நிலை விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், யோகபுரம், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (18.11.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் பாலசுப்பிரமணியம் புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், Dr. பா.சயந்தன் (சிறுவர் சத்திர சிகிச்சை நிபுணர் - யாழ்.போதனா வைத்தியசாலை), பா. ஜனகன் (பொறியியலாளர் ஸ்ரீலங்கா ரெலிகொம் கொழும்பு), பா. சாந்திகன் (பொறியியலாளர்), பா.ஜனந்தனன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா), மோ.மாதங்கி (அவுஸ்திரேலியா), பா.வேணுகானகன் (மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல38/2 ஞானபாஸ்கரோதய சங்க வீதி கல்வியங்காடு எனும் முகவரியில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர் (Dr.பா.சயந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

மரநடுகை மாதம் (நவம்பர்)

" நாகரிகத்தின் வேர் காடுகள்தான் கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது. "

– இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)–


# இலங்கை உய்யப்போவதில்லை!

திருகோணமலையில் புத்தர் சிலை ஒன்று திடீரெனக் கொண்டுவந்து வைக்கப்பட்டமையும், அதன்பின்னர் நடந்த சம்பவங்களும் தெற்கு அரசியல்தலைமைகள் பலரின் முகமூடிகளைக் கழற்றியிருக்கின்றன. இன சமத்துவம், மதசமத்துவம், அனைவரும் இலங்கையர்கள் என்று வாய்கிழிய மேடைகளில் பேசினாலும், அவர்களுக்குள் இருக்கும் பௌத்த மேலாதிக்கச் சிந்தனையை திருகோணமலையில் திடீரென வந்திறங்கிய புத்தர் வெளிக்கொணர்ந்திருக்கின்றார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு புத்தர் சிலையைக் கண்டால் ஏற்படும் அச்சம், புத்தர் பெருமானின் மேலுள்ள வெறுப்பினாலோ - பௌத்த மதத்தின் மீதுள்ள அசூசையாலோ அல்ல என்பதைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். கடந்தகாலங்களில் தங்களின் அதிகார வெற்றிக்காக புத்தர் சிலையை வைத்து தெற்கு அரசியல் தலைமைகள் செய்த கைங்கரியங்களே அதற்கு முழுமுதற் காரணம் . வடக்கு, கிழக்கில் பழம்பெரும் விகாரைகள் இருக்கின்றன, அவற்றில் நித்தமும் எந்தத் தடைகளும் இன்றி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. தமிழ் மக்கள் அதற்கு எப்போதும் எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் அல்லர் -வெறுப்பை உமிழ்ந்தவர்களும் இல்லை. ஆனால் திடீர்த் திடீரென ஆங்காங்கே -அரசியல் நோக்கங்களுடன் -மறைமுகத் திட்டங்களுடன் முளைக்கும் புத்தர் சிலைகளே அந்தப் பிரதேச மக்களினதும் - தமிழ் மக்களினதும் எதிர்ப்புகளைச் சம்பாதிக்கின்றன.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் சட்டவிரோதமாகக் காணிகளை அபகரிப்பதற்கு கடந்த காலங்களில் அப்பாவிப் புத்தர் பயன்படுத்தப்பட்டிருந்தார். மக்கள் காணிகளை அடாத்தாகப் பிடிக்கும் பௌத்த பிக்குகள் அவசர அவசரமாகப் புத்தரை அமரவைத்து அந்தக் காணிகளுக்கு உரிமைகோருவதும், அரச மரத்தின்கீழ் புத்தர் சிலையை நிறுவி பின்னர் அதைச்சூழ குடியேறுவதும் எவ்விதமான தடைகளும் இன்றி, தெற்கு அரசியல்தலைமைகளின் ஆசியுடன் கடந்தகாலங்களில் முன்னெடுக்கப்பட்டன. அதுமட்டுமன்றி மக்களின் காணிகளில் அடாத்தாகக் குந்தியிருக்கும் இராணுவமும் தங்கள் பங்குக்கு ஆங்காங்கே புத்தரை அமரவைத்து பிரச்சினைகளை உருவாக்கியிருந்தது. தமிழ் மக்கள் காலம்காலமாக வழிபட்ட வழிபாட்டிடங்களில் சட்டத்துக்குப் புறம்பாக புத்தரை அமரவைத்து - அந்த வழிபாட்டிடங்களுக்கு உரிமைகோரும் சம்பவங்களும் நடந்திருந்தன. புத்தரின் பெயரால் - பௌத்த மேலாதிக்கச் சிந்தனையால் தங்களின் பூர்வீக நிலங்கள் கண்முன் பறிபோவதைத் தாங்கமுடியாமலே திடீர் புத்தர் சிலைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப்புகளை வெளிக்காட்டிவருகின்றனர்.

கடந்த கால அரசாங்களில் இருந்து மாறுப்பட்ட அரசாங்கம் என்ற நம்பிக்கையில் தமிழ் மக்களும் தற்போதைய அரசாங்கத்துக்கு ஆதரவளித்திருந்தனர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது என்று தமிழ் மக்கள் மத்தியில் இருந்த சிறு நம்பிக்கை திருகோணமலைச் சம்பவத்துடன் தகர்ந்து போயிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தியும் பௌத்த பேரினவாத சக்திகளின் முன் மண்டியிட்டிருக்கின்றது. தமிழ் மக்களின் அச்சத்தில் உள்ள நியாயத்தன்மையை தெற்கில் உள்ள எந்த அரசியல்தலைவர்களும் புரிந்துகொள்ள முயலவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் முதல் கடைசி வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்வரை பௌத்தமே முதன்மையானது என்று எண்ணிக்கொண்டு, தமிழ் மக்களின் நியாயமான அச்சத்தை உதாசீனப்படுத்தியிருக்கின்றனர். புத்தரின் பெயரால் வடக்கு, கிழக்கில் நடக்கும் ஆக்கிரமிப்புகளை நியாப்படுத்தியிருக்கின்றனர். இந்தப் பிரச்சினையை அரசியல் ஆதாயமாக்கி குளிர்காய முற்படுகின்றனர்.இலங்கையின் அழிவுக்கு -வங்குறோத்துக்கு -நாட்டில் புரையோடியிருக்கும் இனப்பிரச்சினைக்கு தெற்கின் இந்தப் பௌத்த மேலாதிக்கச்சிந்தனையே முதன்மையான காரணம். இதுவே தமிழ் இளைஞர்களை ஒரு கட்டத்தில் ஆயுதப் போராட்டத்தை நோக்கியும் தள்ளியிருந்தது. இப்போதும் தெற்கின் மனநிலையில் எந்த மாற்றத்தையும் காணமுடியவில்லை. அகிம்சையைப் போதித்த புத்த பெருமானைத் தொடரும் தெற்கு பௌத்த தலைமைகளும் மேலாதிக்க எண்ணத்தால் நிறைந்திருக்கின்றன. இவ்வாறிருக்கையில் இலங்கையில் ஒருபோதும் மாற்றம் ஏற்படப் போவதில்லை. இலங்கை உய்ந்துவிடப் பேரவதில்லை.







## ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 300 மில்லியன் டொலர் கடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு,நவ.19

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 300 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெறுவதற்கான கடன் ஒப்பந்தங்களில் அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் ஹர்ஷனா சூரியப்பெரும மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பாக இலங்கை வதிவிடப் பணியின் நாட்டு இயக்குநர் தகா பூமி கடோனோ ஆகியோர் கொழும்பில் கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

நிதித்துறை ஸ்திரத்தன்மை மற்றும் சீர்திருத்தத் திட்டம், பெரிய பொருளாதார மீள்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மைத் திட்டம் மற்றும் நிலையான சுற்றுலாத்துறை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 300 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெறுவதற்கு அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு 7,000 ரூபா கொடுப்பனவு

கொழும்பு,நவ.19

பொலிஸ் அதிகாரிகளுக்கு 7,000 ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாகப் பொதுப்பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளின் சீருடை மற்றும் பாதணிகளுக்காக அடுத்த மாதத்திலிருந்து கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது. அதற்காக 2025 ஆம் ஆண்டுக்காக 1,100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுஎன்றும்அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## விமானத்தில் சுவையான உணவு; விருதுவென்ற எயார்லைன்ஸ்!

கொழும்பு,நவ.19

விமானத்தில் வழங்கப்படும் சுவையான உணவு மற்றும் பானங்களுக்காக சிறிலங்கா எயார்லைன்ஸுக்கு விருது கிடைத்துள்ளது.

உலகின் முன்னணி பயண ஏற்பாட்டுச் செயலியான 'ட்ரிப்இட்பை கான்கர்' மூலம் சரிபார்க்கப்பட்ட ஒரு மில்லியனுக்கும் அதிகமான பயணிகளின் வாக்குகளின் அடிப்படையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் உள்ள 600க்கும் மேற்பட்ட விமான நிறுவனங்கள் இந்த விருதுக்காக மதிப்பீடு செய்யப்பட்டன. (ச-இ)



## துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்

கொழும்பு,நவ.19

மீடியாகொட பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச்சூட்டில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)

## பயறு கொள்வனவுக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு,நவ.19

நடப்பாண்டு இடைப்போகத்தில் பயறு அறுவடைக் கொள்வனவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பயறுப் பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தின்கீழ் 2025 சிறுபோகத்திலும், இடைப்போகத்திலும் 16,500 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பயறு பயிரிடப்பட்டுள்ளது. அதன்படி விவசாயிகள் தமது உற்பத்திகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு இயலுமாகும் வகையில், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் தேசிய உணவு மேம்பாட்டுச் சபை விவசாயிகளின் பயறு அறுவடையைக் கொள்வனவு செய்வதற்காக வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை – கார்த்திகை 4
20.11.2025
சுபநேரம் : 07.39 - 09.09
ராகுகாலம் : 01.39 - 03.09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயரிகளைக் குளிர்விக்கும் அரசு

## கொதிக்கிறார் சுமனரத்ன தேரர்



கொழும்பு,நவ.19

வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்த தர்மத்தை அழித்து ஈழத்தை நிறுவுவதன் மூலம் புலம்பெயர்ந்தோர் செய்ய விரும்புவதைச் செய்யும் ஒரு அரசாங்கம் தற்போது ஆட்சியில் இருக்கின்றது என்று அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தெரிவித்துள்ளார். திருகோணமலை யில் சட்ட விரோதமாக நிறுவப்படுவதா கக் கூறப்படும் பௌத்த மதஸ்தலத்திலிருந்து புத்தர் சிலை அகற்றப்பட்டது குறித்து நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். தர்ம இலட்சினையுடைய புத்தர் சிலையைப் பொலிஸார் எடுத்துச் சென்றமை தேரருக்கோ அல்லது ஒரு விகாரைக்கோ உரிய பிரச்சினையில்லை. இது முழு நாட்டின் பௌத்தத்தின் மீதான தாக்குதல் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-இ)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 ஈச்சமோட்டை கடற்கரை வீதி 32B எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 2007.04.25 ம் திகதி 1569 ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் "புளியடியிற்புலமும் புங்கடியிற் கலட்டி தலைமடையும் மறுபிரிவுகளும் எனவும் மறுபெயர் வழங்கும் புதுத்தோட்டம்" எனும் பெயர்கொண்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 03.54 அளவு கொண்ட ஆதனத்தை யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை எனும் இடத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கந்தையா தெய்வேந்திரன் என்பவர் குறித்த ஆதனம் தனது பிதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் குறித்த ஆதனத்தை எனது பேரனும் பின்னர் நானுமாக கடந்த 47 வருடங்களிற்கு மேலாக பேணிப் பராமரித்து ஆட்சி செய்து வருகிறோம் எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் குறித்த வெளிப்படுத்தலில் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனம் எனது காலஞ் சென்ற தகப்பனாரின் முதுசமாகும். கந்தையா என்பவர் 35 வருடங்களாக ஆட்சிசெய்து வந்தார். அவருடன் சேர்ந்து நானும் 12 வருடங்கள் ஆட்சி செய்தேன் என்றும் இவை இரண்டு ஆட்சியும் சேர்ந்து 47 வருடங்கள் ஆட்சிசெய்துள்ளோம் என்றும் அவ்வாதனத்தில் கிணறும் வீட்டிற்கான கட்டிட அத்திவாரமும் கட்டியுள்ளேன் என்றும் இவ்வாதனத்தில் வைத்து வரும் வருமானங்களில் ஆதனத்தின் வேலிகளை அடைத்து வருகின்றோம் என்றும் இக்காணியில் நான் செய்து கொண்டுவந்த ஆட்சி மூலமும் எனக்கு பூரண சொந்தமாய் இருக்கின்றது. எனவும் வெளிப் படுத்தியுள்ளார். மேலும் 1992ம் ஆண்டு தொடக்கம் 12 வருடங்களாக தங்குதடையற்ற சுயாதீனமான ஆட்சி செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் சங்கரப்பிள்ளை கந்தையா தெய்வேந்திரமும் பெண் ராகினியும் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 25.04.2007 ம் திகதி 1570 இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சூசையப்பு றெமிங்ரனும் பெண் ஸ்பௌதினாவும் என்பவர்களுக்கு அதே அளவுகொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

சூசையப்பு றெமிங்ரனும் ஸ்பௌதினாவும் என்பவர்கள் பிரசித்த நொத்தாரிசு எஸ் பி.அமரசிங்கி முகதாவில் 2013.06.04 ம் திகதி 9233 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜரின் சுரேனிகா றெமிங்ரன் என்பவருக்கு 11.31 பேச்சஸ் அளவு கொண்ட ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

மேலும் ஜரின் சுரேனிகா றெமின்ரன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2017.02.07 ம் திகதி 6828 ம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி மூலம் அலெக்சான்டர் ஆன் மேரி கிறிஸ்ரி என்பவருக்கு நிலப்பரப்பு 1.குளி 02.02 02.02 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நிபந்தனை அறுதியாக நிறைவேற்றியுள்ளார்.

அதன் பின்னர் அலெக்சாண்டர் ஆன் மேரி கிறிஸ்ரி தற்போது ஞானப்பிரகாசம் சுலக்சனும் பெண் ஆன் மேரி கிறிஸ்ரியும் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2021.02.18ம் திகதி 13065 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜரின் சுரேனிகா றெமின்ரன் என்பவருக்கு அதே விஸ்தீரணம் அளவு கொண்ட ஆதனத்தை அறுதியளித்துள்ளார்.

அடுத்து அரவிந்தன் லவன் பெண் ஜரின் சுரேனிகா (றெமின்ரன் மகள் ஜரின் சுரேனிகா) என்பவர் பிரசித்த நொத்தாரிசு எஸ். செலஸ்ரின் முகதாவில் 2021.03.15ம் திகதி 906 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோல் பெண் தர்சிகா என்பவர்களிற்கு நிலப்பரப்பு 00.குளி 10.50 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நன்கொடையளித்துள்ளார்.

மேலும் அரவிந்தன் லவன் பெண் ஜரின் சுரேனிகா(றெமின்ரன்மகள் ஜரின் சுரேனிகா) என்பவர் பிரசித்த நொத்தாரிசு எஸ்.செலஸ்ரின் முகதாவில் 2023.08.08 ம் திகதி 1239 ம் இலக்கத்தில் நிறைவேறிய திருத்தல் உறுதி மூலம் யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோல் பெண் தர்சிகா என்பவர்களிற்கு குளி 10.5 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்திற்கு திருத்தல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி, கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "புதுத்தோட்டம்" என்ற "புளியடியிற் தோட்டம் புங்கடியிற்கலட்டி தலைமடையும் மறுபிரிவுகளும்" விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 02..02 ஆகும் ஆனால் தற்போது இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ் சுப்பிரமணியம் அவர்களால் 12.03.2021ம் திகதி 0127 ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின் படி விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 3 ஆகும். இதில் தெற்குப் பக்கமாக துண்டு 2 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு 00. குளி 10.50 விஸ்தீருணமுடைய பகுதியாகும் இந்த நிலப்பரப்பு 00 குளி 10.50 இற்கும் எல்லைகள்

கிழக்கு - கடற்கரை வீதி

வடக்கு - மேற்குறித்த படத்தில் துண்டு 1 என காட்டப்பட்ட பகுதி

மேற்கு - மடுத்ததீன் சின்னப்பிற்குரிய ஆதனம்

தெற்கு - ஒழுங்கை


இதனடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும். இவ்வாதனமானது J/66 கிராம சேவையாளர் பிரிவிலும் யாழ்ப்பாணம் பிரதேசசெயலர் பரிவிலும் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள்ளும் அமைந்துள்ளது.

என்பவர்கள் பெண் தர்சிகாவும் தற்போது இவ்வாதனத்தை யோன் கரன்ஸ் கிறிஸ்ரின் வின்சன் டிபோலும் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யோன் கரன்ஸ்கிறிஸ்ரின் வின்சன் டிபோலும் பெண் தர்சிகாவும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23 . 08 . 1941



இறைவன் அடியில்
30 . 11 . 2024

கடந்த 30.11.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சிவலிங்கம் இராசரத்தினம்

(மங்களா ஸ்ரோர்ஸ் பண்டத்தரிப்பு)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (19.11.2025) புதன்கிழமை நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் மதிய போசன நிகழ்வும் நடைபெறும் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மின்னலென ஓராண்டு
ஓடி மறைந்தாலும்
என்றும் எங்கள் இதயத்தில்
வீற்றிருந்து வழிகாட்டும் தெய்வமே
உங்கள் வாக்கினை சிரமேற்று
வாழ்ந்திடுவோம் அவனியிலே.

மங்களா ஸ்ரோர்ஸ்
பண்டத்தரிப்பு.

(CS/59938) J-1

குடும்பத்தினர்
077 764 2009

# மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 10 . 1947



மறைவு
18 . 11 . 2025

## திருமதி பாக்கியலீலா நவரத்தினம்

(ஓய்வு நிலை ஆசிரியர்)

சப்பச்சிமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், "நவஜீவனம்" கச்சாய் வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலீலா நவரத்தினம் அவர்கள் நேற்று (18.11.2025) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினம் (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, துரைராசா, யோகராசா (ஓய்வுநிலை ஆசிரியர்), பரமேஸ்வரி, நவமணி மற்றும் சித்திராதேவி ஆகியோரின் சகோதரியும், நெடுமாறன் (கனடா), முகில்வண்ணன் (நோர்வே), அன்பழகன் (ஆசிரியர் - நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்), நவஜீவன் (குழந்தை மருத்துவ நிபுணர்), பாக்கியதீபன் (UK), வேணுகா (வரி உத்தியோகத்தர் - வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தினி, கலாசோதி, றஞ்சினிதேவி, மணிறஜனி, கமலினி, மநுசுதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பளை கோட்டம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மகிஸ், கஜானா, காடினியா, கனிஷ்கா, ரிதேஸ், டேனுஷன், கவிசன், பிரியங்கன், புருசோத், விக்னன், விஸ்வினி, கபிலன், அபிசரன், அர்விஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தியானாவின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2025) புதன்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் கொடிகாமத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"நவஜீவனம்"
கச்சாய் வீதி, கொடிகாமம்.

(CR/46524) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நகரசபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

மன்னார் நகரசபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு அறிக்கை 4 மேலதிக வாக்குகளால் ஏற்றுக்கொள் ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகரசபையின் தெரிவுசெய்யப் பட்ட மூன்றாவது மக்கள் பிரதிநிதிகள் சபையின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நகரசபைத் தவிசாளர் ஏ.பி.டீ.டீ.பி.வசந் தனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் 2026 ஆம் ஆண்டில் சொந்த வருமானம் 18 ஆயிரம் 337 மில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வாடகை மற்றும் குத்தகை வரு மானமாக 7632 மில்லியனும் ஆதன வரி வருமானமாக 165 மில்லியனும் சேவைக் கட்டணமாக 772 மில்லிய னும் வியாபர உரிமம் மூலமாக 401 மில்லியனும் நீதிமன்றத்தண்டம் மற் றும் ஏனைய தண்டமாக 1059 மில்லின் மற்றும் முத்திரைத் தீர்வை நிலையான வைப்பு வட்டி மற்றும் ஏனைய வருமா னம் 5186 மில்லியன் ரூபாவும் மூல தன பெறுகைகளாக 166 மில்லியன் ரூபா வருமானமாக கிடைக்கப்பெறு மென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாட் டின் பிரதான செலவீனங்களான வாகன எரிபொருள் வாகனத் திருத்தம், சுத்திகரிப்புத் தொழிலாளர் மற்றும் சாரதி சம்பளம் என்பவற்றுக்கு 3234 மில்லி யன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 2026ஆம் ஆண்டு சபை நிதி யில் இரட்டைத் தொகுதி வட்டாரங்களான உப்புக்குளம் மற்றும் எழுத்தூர் வட்டா ரங்களுக்குத் தலா 20 மில்லியன் தொகையும் ஏனைய 5 வட்டாரங்க ளுக்கு தலா 10 மில்லியனும் அபிவி ருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

இந்த வரவு -செலவுக்கான வாக்களிப்பு நடைபெற்றபோது 4 மேலதிக வாக்கு களால் வரவு - செலவு ஏற்றுக்கொள்ளப் பட்டது. (ச-60)

# நெற்செய்கை உரமானியம் வங்கிக்கணக்குகளில் வைப்பு

கிளிநொச்சி, நவ.19

கிளிநொச்சிமாவட்டத்தில் 2025/2026 காலபோக நெற்செய்கைக்கான உரமா னியம் விவசாயிகளின் வங்கிக் கணக் குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 10 கம நல சேவை நிலையங்களின் கீழுள்ள 6 ஆயிரத்து 256 விவசாயிகளுக்கு உரமானியம் அவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள் ளது. நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேயருக்கு 25,000 ரூபா உரமானியம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் அறிவிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-41-113)

# செவிப்புலனற்றோர் 11 பேருக்கு விசேட சாரதி அனுமதிப்பத்திரம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த செவிப்புலனற்றோர் 11 பேருக்கு விசேட சாரதி அனுமதிப்பத்திரம் நேற்றுமுன்தி னம் வழங்கப்பட்டது. யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்க ளம், யாழ்.மாவட்டத் தமிழ் செவிப்புல னற்றோர் அமைப்பு மற்றும் இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேள னம் ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட் டில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டது. யாழ்.மாவட்ட மோட்டார் போக்கு வரத்து உதவி ஆணையாளர் ஏ.கிருபா கரன் தலைமையில் மாவட்டச் செயல கத்தில் இடம்பெற்ற நிகழ்வில், மாவட்டச் செயலக அதிகாரிகள் மற்றும் யாழ். மாவட்டத் தமிழ் செவிப்புல வலுவற் றோர் அமைப்புகளின் பிரதிநிதிகள், மோட்டார்போக்கு வரத்துத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (சு-66)

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 09 . 1946



மறைவு
14 . 11 . 2025

### பரமசாமி கிருஷ்ணபவானி

யாழ் மானிப்பாய் பொன்னம்பலம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், 439, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவிலடியை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பரமசாமி கிருஷ்ணபவாணி அவர்கள் கடந்த (14.11.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற அப்பையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமசாமி (பாலசிங்கம் வாகன் விற்பனையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காங்கேசு, அன்னலட்சுமி, சிவபாக்கியம், சரஸ்வதி மற்றும் நவரட்ணம் (கனடா), கோகிலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி (லண்டன்), சிவபாக்கியம் (லண்டன்), தர்மராஜா (ஐக்கிய அமெரிக்கா), காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனுஷா (லண்டன்), றூபேசன் (பரா - லண்டன்), றமேஷன் (லண்டன்), சஜுஜா (சுவிஸ்), ஜெனுஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரட்ணராஜா, யோகராஜா, கிரிதரன், Yvonne, சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சலோமி (Dentist), அருணச்சன், றக்சன், பாரதி, ஆதீசன், அமேசன், கிரிசானா, சயுன், ஹனுசன் - லுக்சானா (Doctor), வினுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (20.11.2025) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் 75, Shirley Avenue, Shirley, Croydon, Cro8 Sp என்னும் இடத்தில் நடைபெற்று முற்பகல் 10.45 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 610 0337

(CS/59943) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 10 . 1948



மறைவு
18 . 11 . 2025

### கலாபூஷணம் க.ப. பரராஜசிங்கம் (பப்பா)

(இசைநாடகக் கலைஞர், பௌராணிகர், சமாதான நீதவான்)

இந்திரம்மன் கோவிலடி துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், சின்னத்தாய் மூச்சம்பலம் புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் க.ப. பரராஜசிங்கம் (ஓய்வு நிலை விற்பனைப் பிரதிநிதி நெஸ்லே லங்கா லிமிட்டட், முகாமையாளர் லாலா சோப்) அவர்கள் நேற்று (18.11.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலைஞானகேசரி பரஞ்சோதி - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அழகரத்தினம் தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவராஜசிங்கம், தனபாலசிங்கம், கமலகுமாரி, தெய்வேந்திரராஜா, காலஞ்சென்ற வசந்தகுமாரி ஆகியோரின் சகோதரரும், பாக்கியம், ஶ்ரீமதிதேவி, மனோகரன், சுமதி, கதிரவேற்பிள்ளை, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் தனலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், ரதீஸ் (ஆசிரியர் யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), றமேஸ் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யாழ். மாவட்டச் செயலகம்), றாதிகா (ஆசிரியர் யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மீரா (அசிரியர் யா/ மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை), நிரூஜா (நிறைவேற்று உத்தியோகத்தர் இலங்கை வங்கி மானிப்பாய்), கிருபாகரன் (ஆசிரியர் யா/ எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை, யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இலக்கியா, அட்ஷயா, அபிநயா, அதிசயா, கவிநயா ஆகியோரின் பாசமிகு பேரனும், கார்த்திகா, கீர்த்திகா, தர்சன், தனுசா, தரணியா, ரினா, திமித்தி, அபிகேல், ஷஜிந்தா ஆகியோரின் பெரிய தந்தையும், கோசலை, குந்தவி, வானதி, அருணகுமார், அருண்றாம், அருண்பிரசாந் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அவறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கலைக்கோயில்,
[illegible],
புலோலி தெற்கு.

தகவல்
பிள்ளைகள்.
077 744 8702

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சண்முகராசா யோகராணி



**தோற்றம்** 26.07.1959 — **மறைவு** 18.11.2025

2ம் வட்டாரம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், சங்கிலியன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா யோகராணி அவர்கள் நேற்று (18.11.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கிலியன் வீதி,
நல்லூர்.

076 675 7551

தகவல்
குடும்பத்தினர்.

# மருத்துவ முகாமும் நடமாடும் சேவையும்

கிளிநொச்சி,நவ.19

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின்கீழ், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், மருத்துவ முகாம் மற்றும் நடமாடும் சேவை இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளன. இன்று புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மருத்துவ முகாம், மரநடுகை, சுற்றுப்புறச்சூழல் பராமரிப்பு மற்றும் கலாசார நிகழ்வுகள் பிரதேச செயலகத்தில் இடம்பெறும். அதேவேளை நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை இடம்பெறும். இதில் பதிவாளர் பிரிவு, காணி, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், பிரதேசசபை, பொலிஸ் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்கம், மோட்டார் வாகனப்பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம், ஓய்வூதியம், தென்னைப்பயிர்ச் செய்கைச் சபை, கமநல சேவைகள், மின்சாரசபை, நீர் வழங்கல் அதிகார சபை, திறன் அபிவிருத்திப் பிரிவு, மனிதவள முகாமைத்துவப்பிரிவு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு, கிராம அபிவிருத்திப்பிரிவு, கலாசாரப்பிரிவு, கைத்தொழில் திணைக்களம், சமுர்த்தித் திணைக்களம் ஆகியவற்றின் சேவைகள் இடம்பெறும். (க-9)

# வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் இறைச்சிக்கடை, மீன்கடை பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் ஆகியனவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2026

01.01.2026 தொடக்கம் 31.12.2026 வரையான 12 மாத காலப்பகுதிக்கு பின்வரும் குத்தகைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் (தொ.பே.இல. 0242260914) பின்வரும் நிபந்தனைகளுடன் உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | குத்தகை விபரம் | நிரந்தர கொல்களம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை, வருடாந்த குத்தகை (ரூபா.) | மீளளிப்படும் வைப்பு (ரூபா.) | கேள்விப் படிவக்கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | ஆண்டியாபுளியங்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 577,338.75 | 8,000.00 | 1000.00 |
| 02 | பாவற்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 612,180.00 | 8,000.00 | 1000.00 |
| 03 | மாங்குளம் மீன் கடை | - | 223,975.00 | 8,000.00 | 1000.00 |
| 04 | அருவித்தோட்டம் சுற்றுலா மையம் | - | 16,340.00 | 5,000.00 | 1000.00 |
| 05 | சூடுவெந்தபுலவு மீன் கடை | - | 17,850.00 | 8,000.00 | 1000.00 |
| 06 | செட்டிகுளம் பொதுச்சந்தை | - | 57,000.00 | 8,000.00 | 1000.00 |
| 07 | செட்டிகுளம் பொதுமலசலகூடம் | - | 5,700.00 | 5,000.00 | 1000.00 |
| 08 | குருக்கள் புதுக்குளம் கடை தொகுதி | - | 40,500.00 | 8,000.00 | 1000.00 |
| 09 | வேப்பங்குளம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | - | 25,650.00 | 8,000.00 | 1000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் காலம் -19.11.2025 – 01.12.2025 ந் திகதி வரை அலுவலக நாட்களில்
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 01.12.2025 ம் திகதி மாலை 3.00 மணி வரை
3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் காலம் - 02.12.2025ந் திகதி காலை 10.00 மணிக்கு
4. 01.12.2025 திகதி மாலை 3.00 மணிக்குப்பின்பு கிடைக்கப்பெறும் கேள்வி விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
5. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படும். அவை இரண்டையும் ஒரே மாதிரியாக பூரணப்படுத்தி தனித்தனி தபால் உறைகளில் இட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர், கடையின் பெயர் என்பன தெளிவாக இடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு தவிசாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, செட்டிகுளம், வவுனியா எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ உரிய நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக சேர்க்கப்படுதல் வேண்டும்.
6. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதியுடன் நேரடியாக சமூகமளித்தல் வேண்டும்.
7. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் ஏற்கனவே பிரதேச சபையினால் தவறுநராக கணிக்கப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
9. கேள்வி திறத்தலின்போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.
10. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அவர் குத்தகை எடுக்கத் தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
11. சித்தியெய்தும் கேள்விதாரர் 02.12.2025ல் இருந்து 07 நாட்களிற்குள் 12 மாத குத்தகையின் 1/3 பங்கு வைப்புத் தொகையைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படுவதுடன் கேள்வி வைப்பும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளர்க்கு பூரண அதிகாரம் உண்டு.
13. வருடத்தின் வழமையான போயா தினங்கள் மற்றும் வெசாக், பொசன் தினங்களில் இறைச்சி, மீன் கடைகள் மூடப்படுவதோடு அதற்காக குத்தகை கழிவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.
14. இறைச்சிக்கடை, மீன்கடை, பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் என்பன குத்தகைக்கு வழங்கப்பட்ட பின்னர் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தொடர்ந்து மூடிக்காணப்பட்டால் அந்நாட்களுக்குரிய தண்டப்பணம் அறவிடப்படும்.
15. கச்சேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைப்பட்டியலுக்கு அமைவாகவே மாட்டிறைச்சி, மீன் என்பன விற்பனை செய்யப்பட வேண்டும்.
16. குத்தகைக்கு எடுத்தவர் உப குத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும்.
17. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
18. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு – கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.

தவிசாளர்,
பிரதேச சபை,
வெங்கலச்செட்டிகுளம்.

# தமிழ் அரசியற்கைதிகளை விடுவித்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்துங்கள்

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு,நவ.19

நீண்டகாலமாக சிறைகளில் வாடும், தமிழ் அரசியற்கைதிகளை விடுவித்து, அரசாங்கம் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்றில் இடம்பெற்ற நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்தின் உரிமைகளுக்காக குரல் கொடுத்ததற்காக பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் கடந்த காலத்தில் தமிழ் மக்கள் பலரும் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். அவ்வாறு சிறை வைக்கப்பட்ட பலரும் விடுவிக்கப்பட்டிருந்தாலும், தற்போதும் 10 தமிழ் அரசியற் கைதிகள் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் 15 தொடக்கம் 30 ஆண்டுகளாக சிறையில் வாடுகின்றனர்.

மகஸின் சிறைச்சாலையில் அறுவரும், மஹர சிறைச்சாலையில் இருவரும், வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஒருவரும், தும்பறை சிறைச்சாலையில் ஒருவரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறைகளிலேயே தமது இளமைக்காலங்களைத் தொலைத்துவிட்டு, எஞ்சியுள்ள தமது வாழ்க்கைக் காலங்களையும் சிறைக் கம்பிகளுக்குப் பின்னாலேயே தொலைத்து விடுவோமோ என்ற ஏக்கங்களுடன் உள்ளனர். இவர்கள் அனைவருமே சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். வருமானத்தை ஈட்டிக்கொடுக்கவேண்டிய இவர்கள் சிறைகளில் இருப்பதால், அவர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. கடந்த 10ஆண்டுகளில் மட்டும் 11 தமிழ் அரசியற்கைதிகள் இறந்துள்ள துயரங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே அரசாங்கத்தின் ஒற்றுமைப்பாட்டுக்கான முயற்சியாகவும், நல்லிணக்கச் செயற்பாட்டின் சமிக்ஞையாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 அரசியற்கைதிகளையும் நல்லிணக்க அடிப்படையில் தாமதமின்றி விடுதலை செய்யவேண்டும் - என்றார். (க-246)

# முயல் பிடிக்கும் குழுவால் பொதுமக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், நவ.19

குப்பிழான் தெற்கில் பட்டப்பகலில் கொட்டும் மழைக்கு மத்தியில் முயல்கள் பிடிக்க வந்த குழு ஒன்றால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் தோட்டங்களுக்குள்ளும், பற்றைகளுக்குள்ளும் மறைந்திருக்கும் முயல்களைப் பிடித்து சட்ட விரோதமாக இறைச்சியாக்கும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமையும் இந்தக்குழு கொட்டன்களுடன் விவசாய வீதிகளில் நின்றதால் அச்சத்துடன் பயணிக்கவேண்டியிருந்தது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுதொடர்பில் கடும் விசனம் வெளியிட்டுள்ள அந்தப் பகுதி மக்கள் இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் தலையிட்டு உடனடிநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநேரத்துக்கு
எதிரான போராட்டமே
உண்மையான போராட்டம்
என்பதை தலைவர்கள்
புரிந்துள்ளார்கள்.

- றொபின் சர்மா

பூ தன்
பொய்கை

19.11.2025 புதன்கிழமை

பானுஷா நிமல்

# செங்காந்தள் தமிழர் தேசத்தின் அடையாளம்

கார்த்திகை மாதத்தில் ஈழத்தமிழர்கள் வரலாற்று விழுமியம் கொண்ட கார்த்திகைப்பூ என நாம் அழைக்கும் காந்தள் மலரை எமக்கான மலராகக் கொண்டாடுகின்ற பாக்கியத்தை நாம் கொண்டுள்ளோம்.

இதன் இதழ்கள் பெண்களின் கைவிரல்களுக்கு ஒப்பிட்டுக் கூறப்படுவதால் இதனைக் காந்தள் மலர் என்பர். இந்தக் கார்த்திகைப்பூ பண்டைத் தமிழர் வாழ்விலும் மிகவும் நெருக்கமான ஒன்றாக இருந்து வந்துள்ளது

'காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்' என்று காந்தள் மலர் மாலை அணியும் வழக்கத்தை பதிற்றுப்பற்று அத்தாட்சிப்படுத்துகின்றது. 'மரகதமணித்தாள் செறிந்த மணிக்காந்தள் மென் விரல்கள்' என்று சிலப்பதிகாரம் உவமை செய்கின்றது. 'சேலை அடுக்கத்துச் சுரம்பு என விரிந்த காந்தளுள்ளும்' என தெய்வங்களுக்குக் காந்தள் பூ சூட்டப்பட்டதை அகநானூறு தெளிவுபடுத்துகின்றது.

'வெய்யறி சிறப்பன் வெளவாய் வேலன் வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை' என்று காந்தள் மலரணிந்து வெறியாடுவதைத் தொல்காப்பியம் சித்தரிக்கின்றது. அத்துடன் தமிழரின் போர்க்கடவுளான முருகனுக்குரிய பூவாக புறப்பொருள் வெண்பாமாலை சிறப்பித்துக் கூறுகின்றது. இவ்வாறாக கார்த்திகைப் பூவைப் பற்றிப் பாடாத புலவர்களே இல்லை என்று கூறுமளவிற்கு பழந்தமிழர் இலக்கியங்கள் எங்கும் கார்த்திகைப்பூ நிறைந்து கிடக்கின்றது.

இவ்வாறாக பண்டைய காலம் தொட்டு தமிழர் பண்பாட்டுக்கு நெருக்கமான பூவாக இருப்பதுடன் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கின் இயற்கைச் சூழலுக்குரிய ஓர் உள்நாட்டு இனமாக இருப்பதுமாகக் காணப்படுவதுடன் தமிழர் தேசத்தின் அடையாளச் சின்னமாக இந்தப் பூ விளங்குவது யாவரும் அறிந்ததே.

சிவப்பு - மஞ்சள் வண்ணங்களைப் பிரதிபலிக்கும் பூவிதழ்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பாங்கில் அந்தப்பூ விரியும் அழகும் சிறப்புத்தன்மை வாய்ந்தவையாகும். இதை அழகு செய்வதாக கவிஞர் புதுவை இரத்தினதுரையின், 'கார்த்திகைப் பூவின் நிறத்தில் இவள் கட்டுற சேலைகள் இருக்கும் கார்த்திகை மாதம் கல்லறை நாளில் தாயவள் மேனி சிலிர்க்கும்' என்ற வரிகள் மேலும் சிறப்பை ஊட்டுகின்றது. சிம்பாவே நாட்டின் தேசிய மலராகவும், தமிழகத்தின் மாநில மலராகவும் உள்ள கார்த்திகைப் பூ விடுதலைப் புலிகளால் தமிழர் தேசத்தின் தேசிய மலராக பிரகடனப்படுத்தப்பட்டது. உலக அரங்கில் ஈழத் தமிழினத்தின் குறியீடாக வேறு எந்தப்பூவை விடவும் பொருத்தமான தேர்வாகக் கார்த்திகைப்பூ சிறப்புப் பெற்றுள்ளது. ஆனால் கார்த்திகை பூ சொல்லும் செய்தியை அது கமழும் தேசிய வாசத்தை நுகர்வதற்குப் பேரினவாதம் தயாராக இல்லை.

இதனைவிட எம் தேசியப்பூ gloriosa superba என்ற இனமாகும். கார்த்திகைப்பூ கொடியில் பூக்கும் மலர். ஆங்கிலத்தில் இதன் பெயர் gloriosa என வருவதற்கு gloriosu என்ற சொல் அடிப்படையாகும். இதன் பொருள் மிக அழகானது என்பதாகும். ஞரிநசடிய என்பது மிகவும் அழகான என்ற மேன்மையைக் குறிக்க வைக்கப்பட்டது. கிழங்கில் இருந்து குறித்த காலத்தில் மட்டும் முளைத்துப் பூத்து பின் மடிந்து நிலத்தின் கீழ் கிழங்கில் மட்டும் உயிர்வாழும் செடியும் பூவும்தான் கார்த்திகைப்பூ. அதன் உயிர்வாழ்வு விழ விழ எழுதல் என்ற பொருளையும் கொள்கிறதல்லவா அதே போல்தான் எம் மாவீரர்களும் விழ விழ எழுந்து கொண்டே இருந்தார்கள். இந்தக் கார்த்திகைப்பூச் செடியில் கொல்கிசின் எனப்படும் நச்சுத்தன்மை இராசாயனமும் காணப்படுகின்றது. போரில் கழுத்தில் சைனட் எனும் குப்பியை வீரமாக அணிந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இது ஒப்பிடப்பப்படுகிறது. இது செங்காந்தள், வெண் காந்தள் என இருவகையாகக் காணப்படுகிறது. இந்தப் பூவில் இதழ் நுனி உள்நோக்கி வளைந்து இருக்கும். அதோடு அதன் விளிம்பு அலை அலையாக இருக்கும். முழு மலர்ச்சிக்குப் பிறகு, இப்பூ ஏழு நாட்களுக்கு வாடாமல் இருக்கும். இதழ்களின் நிறம் ஆரம்பத்தில் பச்சை நிறமாக இருந்து, பின்னர் வெள்ளை கலந்த மஞ்சள் தொடக்கம் மஞ்சளாக மாறும் பின்னர் சிவப்பு கலந்த மஞ்சள் தொடக்கம் கருஞ்சிவப்பு நிறமாகவும், சிவப்பு நிறமாகவும் மாறும். இந்த மலர் தனது தனித்துவமான நிறத்தால் கவனத்தை ஈர்க்கும். இதன் கிழங்கு பிளக்கும் போது, அதில் தளிர்கள் இருந்தால் அது ஆண் காந்தள் ஆகும். தளிர்கள் இல்லாவிடில் பெண் காந்தள் ஆகும்.

தமிழீழத்தை அடையாளப்படுத்தும் சிவப்பு மஞ்சள் வர்ணங்களோடும் மாவீரர் நாளில் ஏற்றப்படும் சுடரைப் போன்ற தோற்றத்துடனும் மலரும் கார்த்திகை மலர்கள் எவருக்கும் சொல்லாமலேயே மாவீரர்களை நினைவூட்டும்.



**தமிழீழத்தை அடையாளப்படுத்தும் சிவப்பு மஞ்சள் வர்ணங்களோடும் மாவீரர் நாளில் ஏற்றப்படும் சுடரைப் போன்ற தோற்றத்துடனும் மலரும் கார்த்திகை மலர்கள் எவருக்கும் சொல்லாமலேயே மாவீரர்களை நினைவூட்டும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு புரையேறுதல்



## பின்பற்ற வேண்டிய முதலுதவி நடைமுறை

■ மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை

குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் என்பது பெற்றோரை மிகவும் பதற்றமடையச் செய்யும் அவசரநிலைகளில் ஒன்றாகும். உணவு, சிறிய பொம்மைகள் அல்லது சிறிய பொருள்கள் குழந்தையின் சுவாசப்பாதையைத் தடுத்துச் சாதாரண சுவாசத்தை நிறுத்தும்போது இது நிகழ்கிறது. இலங்கை, மருத்துவமனைகளில் மூச்சுத் திணறல் நிலையுடன் சிறார்கள் அதிகளவில் அனுமதிக்கப்படுகின்றார்கள். பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்களின் துரித நடவடிக்கை குழந்தையின் உயிரைக் காப்பாற்ற மிக முக்கியமானது.

### குழந்தைகள் ஏன் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்

- அதிக ஆர்வம்: சிறு குழந்தைகள் தங்கள் வாயில் பொருள்களை வைப்பதன் மூலம் ஆராய்கின்றனர்.
- சிறிய சுவாசப்பாதைகள்: அவர்களின் மூச்சுக்குழாய் குறுகியது. இது அடைப்பை எளிதாக்குகிறது.
- உணவுப் பழக்கம்: ஓடும்போது, சிரிக்கும்போது அல்லது படுத்துக்கொண்டிருக்கும்போது சாப்பிடுவது ஆபத்தை அதிகரிக்கிறது.
- சிறிய பருமன் உள்ள உணவுகள்: வேர்க்கடலை, பாப்கார்ன், கடினமான இனிப்புகள் மற்றும் சிறிய இறைச்சித்துண்டுகள் பொதுவாக அடைப்பை ஏற்படுத்துவன ஆகும்.

### மூச்சுத் திணறலுக்கான எச்சரிக்கை அறிகுறிகள்

- திடீர் இருமல் அல்லது வாந்தி
- சுவாசிப்பதில் சிரமம் அல்லது சத்தமாகச் சுவாசித்தல்
- பேசவோ அழவோ இயலாமை
- உதடுகள் நீல நிறமாக மாறுதல்
- தொண்டையை இறுக்குதல் (உலகளாவிய மூச்சுத் திணறல் அறிகுறி)
- சோர்வடைதல் / மயங்குதல்

### பெற்றோர் என்ன செய்ய வேண்டும்

1. குழந்தை வலுக்கட்டாயமாக இருமினால் இருமலை ஊக்குவிக்கவும்.

2. குழந்தை சுவாசிக்கவோ, பேசவோ இயலாமல் அல்லது அமைதியாக இருந்தால்.

ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு: குழந்தையின் தலையைத் தாங்கிப் பிடித்து ஐந்து முறை மெதுவாக முதுகில் தட்டவும், பின்னர் நெஞ்சுப்பகுதியில் இரு விரல்களைப் பயன்படுத்தி 5 முறை அழுத்தம் கொடுக்கவும்.

ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு: தோள்பட்டைகளுக்கு இடையில் ஐந்து முறை தட்டவும், அதைத் தொடர்ந்து ஐந்து மார்பு உந்துதல்கள் (மார்பின் நடுவில் இரண்டு விரல்கள்) கொடுக்கவும்.

3. பொருள் வெளியே வரவில்லை என்றால் குழந்தையை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள். குணப்படுத்துவதைவிட ஏற்படாமல் தடுப்பது சிறந்தது

1. உணவைச் சிறிய துண்டுகளாக வெட்டுங்கள் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சிறிய இனிப்புகளைக் கொடுப்பதைத் தவிர்க்கவும்.
2. விளையாடும்போது அல்லது ஓடும்போது அல்லாமல், அமைதியாக உட்கார்ந்து சாப்பிட குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்.
3. நாணயங்கள், பேட்டரிகள், ஊசிகள் மற்றும் சிறிய பொம்மைகளை எட்டாதவாறு வைத்திருங்கள்.
4. உணவு நேரங்களை மேற்பார்வையிடுங்கள்
5. மூச்சுத் திணறல் முதலுதவி குறித்து பராமரிப்பாளர்கள், தாத்தா பாட்டி மற்றும் ஆசிரியர்களுக்குக் கற்றுக்கொடுங்கள்.

ஒவ்வொரு ஆண்டும், தவிர்த்து இருக்கப்படக்கூடிய மூச்சுத் திணறல் சம்பவங்கள் நம் நாடு முழுவதும் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவற்றை முன்னெச்சரிக்கைகள் மூலம் தடுக்கலாம். பெற்றோர்தான் விழிப்புணர்வு மற்றும் அடிப்படை முதலுதவியை அறிந்துகொள்வது உயிர்களைக் காப்பாற்றும்.

இந்த அறிவை நமது குடும்பங்கள், பள்ளிகள் மற்றும் சமூகங்களுக்குள் வழங்குவதன் மூலம் நமது குழந்தைகளைப் பாதுகாப்போம்.

# உங்களுக்கு வேடிக்கை எனக்கு வேதனை.....!

அன்புள்ள இலங்கை வாழ் உறவுகளுக்கு!
அன்பு கலந்த வணக்கங்கள்
நான் உங்களுக்கு
எழுதும் கடிதம் இது.

என்னை வைத்து நீங்கள்
உங்கள் அரசியல் வாழ்க்கையை
வாழ்வது உலகம் வேடிக்கையாய்
பார்க்கிறது உங்களை!

உலகிலே போற்றுதலுக்குரிய
பௌத்த மதத்தினைநீங்கள்
உதாசீனப்படுத்துவது ஒட்டுமொத்த
பௌத்த மதத்திற்கும் சர்வதேச
அவமானம்

இரவு தூக்குகிறீர்கள்
காலையில் வைக்கிறீர்கள்
இதிலிருந்து உலகம் புரிந்துகொள்கிறது
உங்களது இனவாதச் சாயலை



காவியுடை தரித்த,
பஞ்சசீலக் கொள்கைகளை
வாழ்விலே கடைப்பிடிக்கும்
மதகுரு போர்வையில் நடமாடும்
மத வெறியர்களே.....!
நீங்கள் உண்மையிலே
புத்த பிக்குவா? யுத்த பிக்குவா?

நல்ல வேளை எனக்கு
உயிர் இல்லை. இருந்திருந்தால்
உங்கள் இனவாதச் சாயலுக்கும்
அரசியல் இலாபத்திற்கும்
என்னையும் கொன்றிருப்பீர்கள்.


இம்மாதம் தமிழ் மக்களின்
உணர்வுபூர்வமான மாதம்
அவர்களைக் களங்கப்படுத்த
என்னையே விளையாட்டுப்
பொருளாகப் பயன்படுத்துவது
உங்களுக்கு வேடிக்கையாக உள்ளது
எனக்கு வேதனையாக உள்ளது.

இத்துடன் என் மடலை
நிறைவு செய்கிறேன். இனியும்
இனவாத அரசியலுக்காய்
என்னைப் பகடையாக்காதீர்கள்...!

• யு.ஏ.கார்லன்
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையை அறியாதவனுக்கு புதுமையில் உரிமையில்லை




**மருத்துவர் நாதன் சதீஸ்குமார்**, மிகச் சிறந்த வரலாற்று ஆய்வாளராகவும் திகழ்கின்றார். திருகோணமலையில் பல்வேறு தொன்மங்களை ஆவணப்படுத்தி, தமிழ்த் தேசத்துக்கு ஒப்பற்ற பணியாற்றியுள்ள அவருடனான நேர்காணல் இது.

■ யே.வினிதா

கடந்த காலத்தின் மௌனத்தைச் சொற்களாக்குவது வரலாறு. அதற்கு உயிர் ஊட்டுவது எழுத்தாளரின் திறமை அத்தகைய திறமையால் வரலாற்றின் மறைந்த பக்கங்களை வெளிக்கொணர்ந்தவர், சம்பூர் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அருமை நாதன் சதீஸ்குமார்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியும், திருகோணமலை இராமகிருஷ்ண சங்க இந்துக் கல்லூரியில் உயர்கல்வியும் பயின்ற இவர், பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கலாநிதி பட்டம் பெற்றார். சம்பூரின் தொன்மை, கொட்டியாபுரத்தின் முதுசங்கள், அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய வரலாறு, சம்பூர் மக்களின் இடப்பெயர்வு, நிலக்கரி ஆலை ஆகிய நூல்கள் மூலம் சம்பூர், கொட்டியாபுரம், திருகோணமலை என்பவற்றின் வரலாறு, பண்பாடு, சடங்குகள், மற்றும் சமூக மாற்றங்களை ஆவணப்படுத்தும் அரிய பங்களிப்பை செய்து வருகிறார்.

**கே: உங்களது எழுத்துப் பயணம் எப்போது தொடங்கியது? உங்களை எழுதத் தூண்டிய காரணம் எது?**

ப: எனது சம்பூர் கிராமம் 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தால் வலிந்து இடம் பெயர்க்கப்பட்டது. இதனால் எமது மக்கள் வீடு வாசல் சொத்துகளை இழந்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் இந்தியா போன்ற இடங்களில் அகதிகளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். சம்பூருக்கு இனிச் சென்று வாழமுடியாது என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டு மக்களுக்கு மாற்று வாழ்விடங்கள் காட்டப்பட்டன. ஆனால் அம்மக்கள் வாழ்ந்தால் தமது பூர்வீக ஊரான சம்பூரிலேயே வாழ்வோம் என்று விடாப்பிடியாக இருந்தனர். அந்தக் காலகட்டத்தில் மட்டக்களப்பு பொது மருத்துவமனையில் கடமையாற்றிக் கொண்டிருந்த எனக்கு சம்பூர் கிராமத்தின் வரலாற்றுத் தொன்மைகளையும் பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் வரலாற்று மூலாதாரங்களையும் வாழ்கின்ற பெரியவர்களின் சாட்சியங்களோடு வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது அதன் வெளிப்பாடுதான் 'சம்பூர் பிரதேசத்தின் தொன்மை' என்ற எனது முதலாவது நூலாகும்.

**கே: நீங்கள் எழுதும் நூல்களில் 'சம்பூர்' மற்றும் 'கொட்டியாபுரம்' ஆகிய பகுதிகள் முக்கியமான இடம் பிடிக்கின்றன. இந்த இடங்கள் உங்கள் வாழ்க்கையில் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன?**

ப: சம்பூர் பிரதேசம் கொட்டியாபுரப்பற்று எனும் பெருநில பரப்பினுள் அடங்குகின்றது. கொட்டியாபுரப்பற்று என்பது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சுதேச வன்னிமை சிற்றரசர்களால் அரசாட்சி செய்யப்பட்ட பகுதியாகும். அங்குள்ள பல கிராமங்களில் என்னுடைய உறவுகள் நண்பர்கள் வாழ்கிறார்கள். பண்டைய இராசதானிகள் பலவற்றைக் கொண்ட பிரதேசமாக இது விளங்குகின்றது. பல புராதான வரலாற்று ஆவணச் சான்றுகள் இங்கே புதைந்து கிடக்கின்றன. அவற்றுள் அநேகமானவை வெளியுலகுக்குக் கொண்டுவரப்படவில்லை. எனவே என்னால் முடியுமான அளவுக்கு அக்காலத் தமிழர்களின் வாழ்வியல் சிறப்புகளை வெளிக்கொண்டுவர முயல்கின்றேன்.

## சம்பூர் பிரதேசம் வரலாற்றுத் தொன்மம்

**கே: 'கொட்டியாபுரத்து முதுசங்கள்' எனும் நூலில் தொன்மையான இடங்கள், நிகழ்வுகள், சடங்குகள் மற்றும் கல்வெட்டுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான தகவல்களைத் திரட்டும் போது நீங்கள் எவ்வாறான சவால்களை சந்தித்தீர்கள்?**

ப: தொன்மை வாய்ந்த பல இடங்கள் மக்கள் இலகுவாக செல்ல முடியாத பெருங்காடுகள் வயல்வெளிகள் போன்றவற்றுக்குள்ளேயே இருக்கின்றன. இவ்வாறான இடங்களுக்கு செல்லும்போது ஒழுங்கான வழித்தடம் இருக்காது. இதனால் வாகனங்களிலும் செல்ல முடியாது. நச்சுத்தன்மை வாய்ந்த உயிரினங்களால் பாதிப்பு ஏற்படல், காட்டு மிருகங்களின் அச்சுறுத்தல் என்பன காணப்பட்டன. இதுபோன்ற பல பிரச்சினைகளை எதிர்கொண்டே பயணிக்க வேண்டியிருந்தது. இவற்றையெல்லாம் நான் இலகுவாகக் கடப்பதற்கு என் நண்பர்களின் ஒத்துழைப்பே காரணம் எனக் கூறுவதில் பெருமை அடைகிறேன்.

**கே: உங்கள் நூல்கள் மூலம் நீங்கள் எத்தகைய வரலாற்றுப் பதிவுகளை வெளிக்கொணர முயற்சிக்கிறீர்கள்?**

ப: சம்பூர் பிரதேசமானது பல வரலாற்றுத் தொன்மைகளை கொண்டு காணப்படுகின்றது. வரலாற்று மூலாதாரச் சான்றுகள், சடங்கு சம்பிரதாய வழிமுறைகள், கல்வி, பாரம்பரியம், தொழில்கள், கலை, ஆலய வரலாறு என்று பல விடயங்கள் உள்ளன. இவற்றையெல்லாம் ஆய்வு செய்தே எனது படைப்புக்களை எழுதியுள்ளேன். இவ்வாறான தொன்மையான விடயங்களை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும்.

**கே: உங்களது எழுத்துப் பணிக்கு அல்லது நூல்களுக்கு சமூகத்தில் கிடைத்த எதிர்வினைகள் பற்றி சொல்லுங்கள்?**

ப: சமூகம் எனது எழுத்துக்களை வெறும் வரலாற்று ஆவணமாக மட்டும் பார்க்கவில்லை. அதை இலக்கியத்தின் ஒரு வடிவமாக இரசித்தது. எனது பாணி எளிமையாகவும் உண்மையைச் சிதைக்காமல் வெளிப்படுத்தியதாலும், வாசகர்கள் அதனை சுவாரஸ்யமாகப் படிக்க முடிந்தது. அதனால் தான் பலரும் என் நூல்களை அடுத்த தலைமுறையினருக்கும் அறிமுகப்படுத்தி வருகின்றனர். பலர் என்னுடைய ஆய்வுகளில் வெளிவந்த நூல்களைப் போற்றி ஊக்கமளிக்கின்றனர்.

## வரலாற்றில் அறுந்த பக்கங்களை தேடும் அனுபவம் அலாதியானது

**கே: வரலாறு தொடர்பான நூல்கள் இன்றைய தலைமுறையினருக்கு எவ்வாறு உதவுகின்றன?**

ப: வரலாறு தொடர்ச்சியானது. இடையிடையே அறுந்துபோன பக்கங்களை தேடுவதில் ஏற்படுகின்ற அனுபவம் அலாதியானது. தன்னுடைய சமூகத்தின் இனத்தின் வரலாற்றைப் பற்றி அறியாதவனால் சமூகத்துக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. எமது வாழ்க்கையானது வரலாற்றின் மீது கட்டமைக்கப்படுகின்றது. 'பழமையை அறியாதவனுக்கு புதுமையை உருவாக்கும் உரிமை இல்லை' என்றும் அறிஞர்கள் கூறுவதுண்டு. எனவே எமது வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்வதற்காக வரலாற்றில் ஆய்வு செய்து ஆவணப்படுத்துவது மிக முக்கியம்.

**கே: உங்களது இலக்கியப் பணிக்கு கிடைத்த விருதுகள் மற்றும் அங்கீகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

ப: எனது எழுத்துப் பணிக்காக 2013ஆம் ஆண்டு அகில இலங்கை நல்லுறவு ஒன்றியத்திடமிருந்து 'சாமஸ்ரீ தேசமான்ய விருது' பெற்றேன். அதன்பின், 2014 ஆம் ஆண்டில் 'சம்பூர் பிரதேசத்தின் தொன்மை' நூலுக்காக கிழக்கு மாகாண இலக்கிய விருது கிடைத்தது. 2017 ஆம் ஆண்டில் 'கொட்டியாபுரத்து முதுசங்கள்' நூலுக்காகவும் அதே விருதைப் பெற்றேன். அதே ஆண்டில், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் எனக்கு 'இளங்கலைஞர் விருது' வழங்கியது.

2018 ஆம் ஆண்டு 'சம்பூர் இடப்பெயர்வும் மீள் குடியேற்றமும்' நூலுக்காக மீண்டும் கிழக்கு மாகாண இலக்கிய விருதைப் பெற்றேன். 2022 ஆம் ஆண்டில் திருகோணமலை இராவணசேன அமைப்பு, அகரம் மக்கள் மையம், மற்றும் மூதூர் பிரதேசசபை ஆகியவற்றிடமிருந்து 'ஆவணப்படுத்தலுக்கான பாராட்டுகள்' மற்றும் 'முத்தூர் விருது' எனப் பல அங்கீகாரங்கள் கிடைத்தன.

2023ஆம் ஆண்டு, உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டு பேரவையினரால் வரலாற்று ஆய்வாளருக்கான பாராட்டும், அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினரால் 'இளஞ்சைவப் புலவர் பட்டமும்' கிடைத்தன.

இந்த விருதுகள் அனைத்தும் எனது எழுத்துப் பணி வெறும் ஆவணப்படுத்தலாக அல்லாமல், சமூகத்தின் உணர்வுகளையும் வரலாற்றுச் சுவடுகளையும் காப்பாற்றும் முயற்சியாக மக்கள் ஏற்றுக்கொண்டதற்கான ஊக்கமாக அமைந்துள்ளன.

**கே: தற்போது ஏதும் நூல் எழுதிக் கொண்டிருக்கிறீர்களா? எதிர்காலத்தில் மேலும் எந்தப் பகுதிகளை ஆராய்ந்து எழுத விரும்புகிறீர்கள்?**

ப: ஆம், தற்போது நான் ஒரு புதிய நூல் எழுதிக் கொண்டிருக்கிறேன். எனது ஆர்வம் பெரும்பாலும் திருகோணமலைப் பிரதேசத்தை மையமாகக் கொண்டதே. அந்தப் பகுதியின் வரலாறு, பண்பாடு, சமூக மாற்றங்கள் போன்ற பல்வேறு அம்சங்களை ஆய்வாளனாக ஆழமாக ஆராய்ந்து, அவற்றை எதிர்காலத்தில் நூல்களாக வெளியிட விரும்புகிறேன். திருகோணமலை தொடர்பான மறைந்த கதைகளையும் மறைக்கப்பட்ட உண்மைகளையும் வெளிக்கொணர்வதே எனது இலக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘ஆழ் மனதின் மீள் நினைவுகள்’

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட ஊடகக் கற்கைகள் துறை மாணவன் புங்குடுதீவு டயான் எழுதிய இரண்டாவது கவிதை நூலான‘ஆழ் மனதின் மீள் நினைவுகள்’ கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வன் ர.கஜேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் பிரதம விருந்தினராக பங்கேற்றார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் கலந்துசிறப்பித்தார்.

நிகழ்வில் தலைமையுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ர.கஜேந்திரன் ஆற்றினார். ஆசியுரையை கலாநிதி ரூபன் மரியாம் பிள்ளை அடிகளார் வழங்கியிருந்தார். அத்துடன் கௌரவ விருந்தினர் உரையை ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் நிகழ்த்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து பாடகி கில்மிஷா மற்றும் நூலாசிரியர் புங்குடுதீவு டயான் ஆகியோர் இணைந்து பாடல் ஒன்றினைப் பாடியிருந்தனர்.


அதன்பின் நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலினை விருந்தினர்கள் வெளியீடு செய்து வைக்க முதல் பிரதியினை சிவா நறுமணப்பூங்கா உரிமையாளர் து.குருநாதசிவம் ர்பில் அவருடைய புதல்வர் பெற்றுக் கொண்டார். நூலுக்கான நயவுரையை எழுத்தாளர் வே.முல்லைத்தீபன் ஆற்றியிருந்தார். இறுதியாக நூலாசிரியர் புங்குடுதீவு டயான் ஏற்புரையுடனான நன்றியுரையினையை ஆற்றினார்.














## பித்து

பல் அங்காடியில் ... சந்தையில் ...
வீதியில் ... பெருந்தெருவில் ...
மனிதர்களிடையே ... எவருமின்றி

தேடுகிறாள் அவள்

பன்சலையில் ... தேவாலயத்தில் ...
தவறணையில் ... ஹோட்டலில் ...
கடையில் ...
நுழைவாயில் அடியினில் ...

தேடுகிறாள் அவள்

ஒட்டிட ... பழகிட
தைத்திட அல்லது இணைத்திட
இயலுமான எவருடையதேனும்
உடைந்த இதயத்தை!

சிங்களத்தில் :பவித்ரி மெண்டிஸ்
தமிழில் : இப்னு அஸூமத்



புதன்பொய்கை க்கு நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொரியாவின் தொழில்நுட்பத்திறனை வடக்கு மாகாணத்துக்குப் பகிருங்கள்

## கொரியத் தூதுவரிடம் ஆளுநர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ.19

தொழிற்றுறை, தொழில்நுட்பத் துறைகளில் முன்னேற்றத்தைப் பதிவுசெய்துள்ள கொரிய அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் நீடித்து வரும் திண்மக் கழிவகற்றல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் திட்டம் என்பனவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று இலங்கைக்கான கொரியக் குடியரசுத் தூதுவர் லீ மியோனிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை முன்வைத் துள்ளார்.

கொரியத் தூதுவர் தலைமையிலான குழுவினர் கடந்த திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கொரியத் தூதுவர், திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்துக்கான திட்டம் ஒன்றை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதற்காக நிதி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சு ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலும் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை ஆளுநர் வரவேற்றதோடு, மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழி வகற்றலில் எதிர்கொள்ளும் சவால்களை அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுற்றுச்சூழல் சமநிலை மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட மங்குரோவ் நடுகை ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் யோசனையையும் தூதுவர் முன்வைத்தார். மேலும் இலங்கையில் 11 சுகாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும், அதனுள் வடக்கு மாகாணமும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கொரியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பச்சை வீட்டு விவசாயம் மற்றும் நுண்ணறிவு நீர்ப்பாசன முறைகள் பற்றி வடக்கு மாகாணத்தில் ஒரு கிராமத்தைத் தெரிவுசெய்து இத்திட்டங்களைப் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை ஆளுநர் தூதுவரிடம் கோரினார். இதனைச் சாதகமாக ஆராய்வதாகத் தூதுவர் தெரிவித்தார். (க-113)


# மரண அறிவித்தல்

தோற்றம்
30
.
12
.
1971



மறைவு
17
.
11
.
2025

## திரு. விஜயரட்ணம் மோகனராஜ்

மாவிட்டபுரம், வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு கலைமகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.விஜயரட்ணம் மோகனராஜ் அவர்கள் நேற்றுமுன்தினம் (17.11.2025) திங்கட்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் தவமணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமி மற்றும் லட்சுமி தம்பதியரின் மருமகனும், நந்தினியின் பாசமிகு கணவரும், பிரனுஜா, தேனுகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காந்தரூபன் (ஜேர்மனி), விஜிதா, அமுதா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிரியங்காவின் அன்பு மாமனாரும், சுகுணா (ஜேர்மனி), பிரதாபன், பிரதீபன் (கனடா), சாந்தினி, லக்சினி, யோகபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2025) புதன்கிழமை கல்வியங்காடு கலைமகள் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 873 6732



# நானாட்டான் பிரதேச சபை
## 2026 ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களை பதிவு செய்தல்

நானாட்டான் பிரதேச சபையானது 2026 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிட்ட வழங்கு பொருட்கள், சேவைகள் வழங்குவதற்கு தம்மை பதிவுசெய்து கொள்ள விரும்பும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது என்பதுடன் ஒவ்வொரு தொகுதிகட்டணமாக ரூபா. 1,000.00 செலுத்துதல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 2025.12.17 ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொகுதிகள்
தொகுதி"A"- பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி"B"– சேவைகள்/ வேலை
தொகுதி"C" – வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A – 02 | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்(மரம்/இரும்பு/உருக்கு), மற்றும் பொருட்கள் |
| A – 03 | கணினி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் |
| A – 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள். |
| A – 07 | மின்சாரப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள். |
| A – 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், பேப்பர் மற்றும் ஏனைய பொருட்கள். |
| A – 09 | சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் (மலசல கூட, கட்டடங்களுக்கான) |
| A – 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், வாகனசுத்திகரிப்பு பொருட்கள் |
| A – 11 | தோல் உற்பத்திப் பொருட்கள், பாதணிகள், சப்பாத்துக்கள். |
| A – 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள். |
| A – 13 | நூலகங்களுக்கான நூல்கள். |
| A – 14 | அலுமினியம், இரும்புப்பொருட்கள். |
| A – 15 | கற்கள், மண்வகைகள். |
| A – 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் பனைமரங்கள் மற்றும் சலாகைகள். |
| A – 17 | அலங்காரப்பொருட்கள் |
| A – 18 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A – 19 | உணவு மற்றும் சிற்றுண்டி |
| A – 20 | பலசரக்கு பொருட்கள் மற்றும் அதனுடன் இணைந்த பொருட்கள் |
| தொகுதி -B | சேவைகள் |
| B - 01 | ஒலிபமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப திருத்தம் , பொருத்துதல் ஆலோசனை வழங்கலும். |
| B - 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 03 | அலுவலகத்திற்கான மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் (தொலைநகல் நிழற்படபிரதி இயந்திரம், கணினி, விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம்) |
| B - 04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீளுறுக்குதலும் |
| B - 05 | பதிப்பக அச்சிடுதல் வேலை |
| B – 06 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| B – 07 | குளிரூட்டி, வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்தல் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B – 08 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B – 09 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B – 10 | ஏற்றியிறக்கும் சேவை. |
| B – 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B - 12 | வாகனத் திருத்தங்கள், வாகனங்களுக்குரிய ரியூ ப் ஓட்டுதல், உலோக வேலைகள், வாகன உட்பக்கம் சீற் என்பவற்றுக்கான குசன் வேலை |
| B - 13 | உலோக ஓட்டு வேலைகள் |
| B - 14 | பட வரைஞர் சேவை |
| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
| C – 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C – 02 | வீதி நிர்மாணமும், திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

நிபந்தனைகள்

01. வழங்கல்கள்ஃசேவைகள் 2026 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும்.
02. விண்ணப்பப்படிவங்களை எமது தலைமையலுவலகத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.
03. ஒரு தொகுதிக்கான பதிவுக்கட்டணம் ரூபா. 1,000.00 செலுத்துதல் வேண்டும்.
04. பட வரைஞர் சேவை விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா. 1,000.00.
05. பட வரைஞர் சேவை பதிவுக்கட்டணம் ரூபா. 6,000.00 செலுத்துதல் வேண்டும்.
06. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான கொடுப்பனவு முற்பணம் வழங்கப்படமாட்டாது.
07. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை சபை கொண்டுள்ளாஉ.
08. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத் தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப் படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
09. வியாபார பதிவுச்சான்றிதழ் மற்றும் வியாபார உரிமம் என்பதற்கு அமைய குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள். (பிரதி இணைக்கப்பட வேண்டும்.)
10. விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைகளுக்கான விண்ணப்பம் - 2026" எனக்குறிப்பிட்டு "தலைவர், நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான்" எனும் முகவரிக்கு 17.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்பிக்கப்படல் வேண்டும்.
11. மேலதிக விபரங்களை தொலைபேசி மூலமோ அல்லது நேரடியாகவோ அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். - 023-2050652

தலைவர்,
நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான்.

CR/46178) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவித்தல்
## மாநகர சபை, யாழ்ப்பாணம்
## பாதீடு - 2026

யாழ். மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான பாதீடு(வரைபு) 2025.11.19 ஆம் தொடக்கம் 2025.12.02 ஆம் திகதி வரை
யாழ். பிரதேச செயலகம்
நல்லூர் பிரதேச செயலகம்
யாழ்.மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி
யாழ்.பொது நூல் நிலையம்
ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது. பொதுமக்கள் இவ்வரைபு பாதீட்டினை பரசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2025.11.26 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாநகர சபை செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**திருமதி.மதிவதனி விவேகானந்தராஜா**
**முதல்வர், மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்** **2025.11.19**

# கொழும்பில் மூடுபனி

கொழும்பு,நவ.19

ஹற்றன் முதல் நுவரெலியா வரை நீண்டு செல்லும் கொழும்பு பிரதான வீதியில் தற்போது கடுமையான மூடுபனி நிலைமை நிலவுகின்றது. இந்த மோசமான வானிலை காரணமாக வீதியில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் வீதியில் பயணிக்கும் அனைத்து சாரதி களும் தமது வாகனங்களின் முன்விளக்குகளை முறையாக ஒளிரச்செய்து, கவனமாகவும் மிகக் குறைந்த வேகத்திலும் பயணிக்கவேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் A-9 வீதியோரமாக கச்சேரிக்கு அருகாமையில் 4 அறைகள் கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவன ஊழியர்கள் / மாணவர்கள் / தொழில் புரிபவர்கள் குழுவாக தங்குவதற்கு குறுகிய கால அடிப்படையில் தளபாட வசதிகளுடன் வழங்கப்படும்.
(குடும்பம் வசிப்பதற்கு பொருத்தமற்றது.)
**T.P: 0778864868**

## காணி விற்பனைக்கு

J/214, K.K.S வீதி மல்லாகத்தில் 2 1/4 பரப்புக் காணி (பழைய சோடா கம்பனி ஒழுங்கை அருகில்) விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:
**077 753 2994**

## நானாட்டான் பிரதேச சபை
## சேவைகளுக்கான பெறுகைகள் அறிவித்தல் - 2026
## 2026ஆம் ஆண்டுக்கு தேவையான ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர் மற்றும் சாரதி சேவை

நானாட்டான் பிரதேச சபைக்கு பின்வரும் சேவைகளுக்கான பெறுகைகள் 2026 தை 01ஆம் திகதி முதல் 2026 மார்கழி 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு கோரப்படுகின்றன.

1. சேவையின் விபரமும் வைப்புத் தொகைகளும்

ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளி (திண்மக் கழிவகற்றல். ஏனையவை)

| சேவைஇல | விபரம் | தேவைப்படும் ஆளணியின் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | தொழிலாளி – ஆண்கள் | 02 | 2,000.00 | 20,000.00 |
| 02 | தொழிலாளி – பெண்கள் | 02 | | |

ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளி (வாகன சுத்திகரிப்பு ஏனையவை)

| சேவைஇல | விபரம் | தேவைப்படும் ஆளணியின் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | தொழிலாளி – ஆண் | 01 | 2,000.00 | 20,000.00 |

ஒப்பந்த அடிப்படையிலான சாரதி (திண்ம / திரவ கழிவகற்றல் - வாகனங்கள்)

| சேவை இல | விபரம் | தேவைப்படும் ஆளணியின் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | சாரதி – ஆண்கள் | 02 | 2,000.00 | 20,000.00 |

ஒப்பந்த அடிப்படையிலான மின்னிணைப்பாளர்

| சேவை இல | விபரம் | தேவைப்படும் ஆளணியின் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | மின்னிணைப்பாளர் – ஆண் | 01 | 2,000.00 | 20,000.00 |

2. வைப்புக்கள்
பெறுகைக்கான மேற்குறித்த வைப்புத் தொகைகளை (மீளளிக்கப்படாத மற்றும் மீளளிக்கப்படும்) பிரதேச சபையில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்படாத பெறுகை மனுதாரர்களுக்கு பெறுகைகளுக்கான ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டதும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.
3. வியாபாரப்பதிவுச் சான்றிதழ்
பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் குறித்த சேவைக்கான பதிவினை உறுதிப்படுத்தும் பொருட்டு வியாபாரப்பதிவு சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வட மாகாணத்தில் நிரந்தரப் பதிவினைக் கொண்டிருத்தல் அல்லது தமது கிளை அலுவலகத்தினையாவது கொண்டிருத்தல் வேண்டும்.
4. அனுபவச்சான்றிதழ்
கடந்தகால. நிகழ்கால அனுபவச் சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
5. கூலி வீதம்
தொழிற் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கூலி வீதங்களிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.
6. பெறுகைப்படிவங்கள் ஃ ஆவணங்கள்
பெறுகை ஆவணங்கள் 2025.11.20 ஆம் திகதி தொடக்கம் 2025.12.17 ஆம் திகதி பி.ப 14.00 மணி வரையும் நானாட்டான் பிரதேச சபையில் அலுவலக கடமை நேரங்களில் வழங்கப்படும். பெறுகைப் படிவங்கள் அனைத்தும் இரு பிரதிகளில் முதலாம் பிரதி. இரண்டாம் பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.
7. பெறுகைகள் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறை
ஒவ்வொரு சேவைக்கும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன் சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் "தலைவர் உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான், மன்னார்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது நானாட்டான் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் சேவை விபரம் குறிப்பிடல் வேண்டும். பெறுகைகள் வைப்புத் தொகைகளை (மீளளிக்கப்படாத மற்றும் மீளளிக்கப்படும்) செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை பெறுகைப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
8. பாதுகாப்பு வைப்பு
சித்தியடையும் கேள்விதாரர் தங்களது கேள்வித் தொகையின் 5% இனை பாதுகாப்பு வைப்பாக முன் செலுத்தி குறித்த சேவையின் பேரில் ஒப்பந்தக் கடிதம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து 7 தினங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும்.
9. பெறுகை ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி
சகல முத்திரை இடப்பட்ட பெறுகைகளும் 2025.12.17 ஆம் திகதி பி.ப 15.00 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
10. பெறுகைகள் திறத்தல்
பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் பெறுகைப்பத்திரங்கள் 2025.12.17 ஆம் திகதி பி.ப 15.00 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட விண்ணப்பதாரரின் பிரதிநிதியோ பெறுகைகள் திறக்கும் போது சமூகமளிக்கலாம். பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பப்படாத ஆவணங்களும் பூரணமாக நிரப்பப்படாத நடைமுறை விலைகளுடன் ஒவ்வாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேற்படி பெறுகை கோரல்களை இரத்து செய்யவோ, நிறுத்தி வைக்கவோ, பகுதியாக வழங்குவதற்கோ, புதிதாகக் கோருவதற்கோ பெறுகைகள் குழுவுக்கு பூரண அதிகாரமுண்டு.

- பெறுகை தொடர்பான பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்களை 023-2050652 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**தலைவர்**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,**
**நானாட்டான் பிரதேச சபை,**
**நானாட்டான், மன்னார்**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அதிபர் அருட்தந்தை அன்ரன் பீற்றர் திருமகன் அவர்களின் அன்புத் தாயார்
**அமரர். அன்ரன் பீற்றர் சகாயகொன்சி**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற்றியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

## வேலையாட்கள் தேவை

இலங்கையின் முன்னணி நிறுவனத்தில் யாழ்ப்பாணத்திற்கும், அச்சுவேலிக்கும் வேலை வெற்றிடங்கள் உள்ளன.
O/L சாதாரண தரத்தில் ஆறு பாடங்களிலும் உயர்தரத்தில் மூன்று சித்திகளும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
**077 803 9320, 075 535 9166**

## யாழ்ப்பாணப் பலகாரம் செய்யத் தெரிந்தவர் தேவை

கொழும்பில் உள்ள யாழ்ப்பாண உணவுப்பொருள் தயாரிக்கும் இடத்திற்கு பயித்தம் உருண்டை சீனி அரியதரம், வடை, சீனி முறுக்கு தயாரிக்க தெரிந்த பெண்கள் தொடர்பு கொள்ளவும்.
தங்குமிடம் தரப்படும். அனுபவம் அவசியம்.
சம்பளம் 120000/- தொடங்கி 150000/- வரை.
உங்கள் பெயர் முகவரியை SMS செய்யவும்.
**075 800 5057**
(CS/59935) J-1

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் அதிபர் அருட்தந்தை
**அன்ரன் பீற்றர் திருமகன்**
அவர்களின் அன்புத் தாயார்
அமரர். அன்ரன் பீற்றர் சகாயகொன்சி
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற்றியடைய பிரார்த்திக்கின்றோம்.
**புனித பத்திரிசியார் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

## இரங்கல் திருப்பலி



**அமரர் அன்ரன் பீற்றர் சகாயகொன்சி (ஜீவம்)**
15.11.2025 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தாயாரின் பூதவுடல் இன்று (19.11.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புனித தோமையார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கோரியடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மகன் - அருட்தந்தை அ.பீ.திருமகன் - [illegible]
மகள் - [illegible] - [illegible]

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலைச்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது நாட்டில் ஆட்சியைப் பிடிப்பதற்குரிய எளிமையான வழியாக இனவாதம் மற்றும் மதவாதம் உள்ளன. எனவே, திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவத்தை அடிப்படையாக வைத்து அரசியல் இலாபம் தேடுவதற்கு சில குழுக்கள் முற்பட வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறான சம்பவங்களுக்கு இனி இடமில்லை. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்குரிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது. அதற்கமைய அவர்கள் செயற்படுவார்கள்.
எமது நாட்டில் புத்தர் சிலைக்கு சேதம் விளைவிக்கப்பட்டதால் பெரும் குழப்பங்கள் ஏற்பட்ட சம்பவங்களும் உள்ளன. எனவேதான், புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது. பின்னர் மீள வைக்கப்பட்டது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவே பொலிஸார் தலையிட்டனர்.
திருகோணமலை சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு தமது அரசியல் கனவுகளை நிறைவேற்றவும், மக்களைத் திரட்டுவதற்கும் சில குழுக்கள் முற்படலாம். அவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது. திருகோணமலை சம்பவம் தொடர்பில் மகாநாயக்க தேரர்களும் அவதானம் செலுத்தியுள்ளனர். எனவே, அந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும் -என்றார். (அ-ம-44)

## அஞ்சலிப்பு...

மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கில் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. மாவீரர் தினத்துக்கான ஏற்பாடுகள் தற்போதிருந்தே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூருவதற்கு அவர்களின் உறவுகளுக்கு உள்ள உரிமையை ஏற்கின்றோம். ஆனால் அந்த போர்வையில் பயங்கரவாதத்துக்குத் தூபமிடும் வகையிலான நடவடிக்கையில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
விடுதலைப் புலிகளின் ஆதரவாளராகக் கருதப்படும் தமிழக அரசியற் தலைவர் ஒருவர் பலாலி விமான நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு வந்து நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளார். இவர், கடந்த 2011ஆம் ஆண்டு இலங்கைக்கு வர முற்பட்டபோது திருப்பி அனுப்பப்பட்டிருந்தார். எனவே, இந்த விடயம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## வடக்குக்...

நடைபெற்ற பட்ஜெட் விவாதத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேலும் தெரிவித்ததாவது:-
பொருளாதாரத்துக்கு தேசிய பாதுகாப்பு எவ்வளவு முக்கியத்துவம் என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிந்து வைத்துள்ளதா என்பது சந்தேகமே. ஆழம் அறியாது நீரில் நடந்து செல்வது போல்தான் பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் செயற்படுகின்றது.
30 வருடகால போரால் பாதிக்கப்பட்டவர்கள் நாம். மூவின மக்களும் பாதிக்கப்பட்டனர். போர் முடிந்துவிட்டது எனக் கூறமுடியாது. எனவே, தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கியே இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். வடக்கில் வாக்குகளை மட்டும் இலக்கு வைத்து முடிவுகள் எடுக்கப்படக்கூடாது - என்றார். (அ-ம-44)

## திருகோணமலையில்...

வாறு ராஜாங்கனை சத்தா ரதன தேரர் தெரிவித்துள்ளார்.
திருகோணமலையில் அடாத்தாக வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை தொடர்பில் சத்தா ரதன தேரர் மேலும் தெரிவித்ததாவது:-
திருகோணமலையில் இடம்பெறும் பதற்றங்களுக்குப் பின்னால் மிகப்பெரும் அரசியல் சூழ்ச்சி உள்ளது. நாமல் ராஜபக்ச என்னும் திருடனை நாட்டின் ஜனாதிபதியாக்கும் நோக்கிலேயே இந்த விடயம் தூண்டப்பட்டு வருகின்றது. புத்தரை வைத்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஆக்கிரமிப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாது.
நாட்டில் தற்போது நிலவும் போதைப் பொருள் கலாசாரம், பெண்கள் மீதான அத்துமீறல்கள், கொலைகள், குற்றச் செயல்கள் தொடர்பில் பேச முன்வராத நபர்கள், புத்தர்சிலை விவகாரத்தை பெரிய பிரச்சினையாக மாற்றி வருகின்றனர். புத்தர் சிலைகளை அமைப்பதை விட தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கு அனைவரும் கூட்டாக இயங்கவேண்டும். புத்தர் எங்களது மனதில் தான் இருக்கிறார். எனவே, மதகுருக்கள் இத்தகைய தேவையற்ற விடயங்களில் இருந்து விலகியிருக்க வேண்டும். மதகுருமார் என்பதற்காக நாட்டை நாசமாக்க இடமளிக்க முடியாது - என்றார். (அ-ம)

## வங்குரோத்து...

வில் ஜனாதிபதி உரையாற்றியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
திருகோணமலையில் நடந்த சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் அறிக்கை கோரியுள்ளேன். இது விடயத்தில் இனவாதத்துக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். பௌத்தர்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் இனவாதத்தை நிராகரிக்கின்றனர்.
தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் ஊழல் நடந்தால் அதற்கு எதிராகப் போராடலாம், ஜனநாயக மீறல்கள் இடம்பெற்றால் அதற்கு எதிராகப் போராட்டம் நடத்தலாம். பொருளாதாரம் சரிந்தால் அதற்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம் நடத்தலாம். ஆனால் இவை எதுவும் நடக்கவில்லை. அதனால்தான் தோல்வி கண்டதரப்புகள் இனவாத சூழ்நிலையை ஏற்படுத்த முற்படுகின்றன. எனவே, பழைய இனவாத நாடகங்கள் இனி இந்நாட்டில் எடுபடாது. இனவாதத்தால் இனி அரசியல் வரலாற்றை எழுத முடியாது - என்றார். (அ-ம-44)

## பதிவுகள்...

றுச் செவ்வாய்க்கிழமை காலை யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 13 முதியோர் பராமரிப்பு இல்லங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இவற்றுள் மூன்று முதியோர் பராமரிப்பு நிலையங்கள் இதுவரை எந்தவிதமான பதிவுகளையும் மேற்கொள்ளாமல் இயங்கி வருகின்றன. இந்த முதியோர் இல்லங்கள் மூன்று மாதகால அவகாசத்துக்குள் பதிவினை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் எந்தவிதமான முன்னறிவித்தலும் இல்லாமல் இழுத்து மூடப்படும்.
முதியோர் இல்லங்கள் சரியான வகையில் முதியோர்களைப் பராமரிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. குறிப்பாக, முதியோர் இல்லங்கள் முதியோர்களின் உடல் பராமரிப்பில் மாத்திரம் அக்கறை காட்டாமல் அவர்களின் உள ஆரோக்கியத்தையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் இரு மாதங்களுக்கு ஒரு முறையாவது இவ்வாறான உள ஆற்றுப்படுத்துகைச் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.
இதற்கு மேலாக முதியோர் இல்லங்கள் தொடர்பில் சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. முதியோர் இல்லங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் முகாமையாளர் முன்னிலையில் பாராமரிக்கும் விதத்துக்கும், முகாமையாளர் இல்லாத வேளையில் நடந்து கொள்ளும் விதத்துக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது. சில ஊழியர்கள் முதியோர்களுடன் மரியாதையற்ற சொற்பிரயோகத்தை மேற்கொள்வதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை தொடர்பில் விசாரிக்கப்படும் - என்றார். (அ-ம-66)

## வழக்குத்...

மையில் போராட்டம் நடத்தினார்கள். இதன்போது, காற்றாலைகளை அமைப்பதற்கான உபகரணங்களைக் கொண்டுவந்த வாகனங்களை இடைமறித்தும் சிலர் போராட்டம் நடத்தியிருந்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது.
குற்றஞ்சாட்டப்பட்டோரின்சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணிகள் புனிதநாயகம், டெனிஸ்வரன், செபநேசன் லோகு, பிறிமூஸ் சிராய்வா, டினேஸ், சர்மிளன் டயஸ் உட்பட பலர் முன்னிலையாகினார்கள். காற்றாலைப் பிரச்சினை ஜனாதிபதி வரை கொண்டுசெல்லப்பட்டு தற்போது சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளதால், பிரதிவாதிகளை விடுவிக்குமாறு சட்டத்தரணிகள் மன்றில் கோரிக்கை வைத்தனர். இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். வழக்கு டிசெம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-60)

## சிங்கள...

இது தொடர்பில் அவர் நேற்று அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
இடதுசாரி பாரம்பரியத்தைச் சார்ந்தவர்களென காட்டிக் கொள்ளும் ஜே.வி.பி. அரசு, வழக்கமான 'சிங்களப் பேரினவாத அரசு'தான் என்பதை உறுதிப்படுத்தும் வகையிலேயே திருகோணமலை விவகாரத்தில் செயற்பட்டுள்ளது. இந்த அடாவடி ஆதிக்கப் போக்கை விடுதலைச்சிறுத் தைகள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.
தமிழர்களின் தாயகமான ஈழமண்ணில் கலாசார படையெடுப்பை நடத்தும் ஒரு வடிவமாக ஆங்காங்கே புத்தர் சிலைகளை நிறுவும் நடவடிக்கைகளில் சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். தமிழ்மண்ணை சிங்கள மயப்படுத்துவதையும் பௌத்த மயப்படுத்துவதையும் ஒரு செயற்றிட்டமாக வரையறுத்துத் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். வலதுசாரிகள் மட்டுமின்றி இடதுசாரிகளும் அதனைத் தொடரும் நிலை உள்ளது. இதன்மூலம், ஜனாதிபதி அநுரவும் கடந்தகால ஆட்சியாளர்களைப் போலவே இலங்கைத்தீவு சிங்களவர்களுக்கு உரியது என்று நம்புகின்றார் போன்று தெரிகின்றது. தமிழினத்தை ஒடுக்குவதற்கான பேரினவாதக் கூறுகளைக் கொண்டதாக அரசியலமைப்புச் சட்டம் இருப்பதே இதற்கு காரணமாகும். தமிழ்மக்களின் நலன்கருதி இலங்கை தேசத்துக்கான ஆட்சிநிர்வாகத்தில் 'கூட்டாட்சி' (சமஷ்டி) நிர்வாக முறையை அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.
ஏற்கனவே, தமிழர்களின் தரப்பாக நின்று இந்திய ஒன்றிய அரசு, 'இந்திய இலங்கை ஒப்பந்தந்தை' ஏற்படுத்திய வரலாறு உள்ளது. இன்னும் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்திட வேண்டுமென சிங்கள ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டிய 'தார்மீகப் பொறுப்பு' இந்திய ஆட்சியாளர்களுக்கு உண்டு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.
அந்த வகையில், புதிய அரசியலமைப்பில் தமிழ்த் தேசிய இனத்துக்கான முழுமுற்றான 'தன்னாட்சி அதிகாரத்தை' வழங்குவதற்குரிய வாய்ப்பை உருவாக்கிட வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.
அண்மையில், நான் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்தபோது ஈழத்தின் களநிலையை என்னால் உணர முடிந்தது. யுத்தத்தின்போது நேரடியாகவே இனவழிப்புச் செய்யப்பட்ட தமிழ் மக்கள், இப்போதும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் திட்டமிடப்பட்ட வகையில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு ஆளாகி வருகிறார்கள். இலங்கையின் ஒற்றை ஆட்சி முறைமையின்கீழ் தமிழ் மக்கள் ஒருபோதும் நிம்மதியாக வாழ முடியாது - என்றுள்ளது. (அ-ம-26)

## மன்னார்...

கையடைந்த பிளாஸ்ரிக் துகள்கள் தென்னிலங்கைக் கடற்பரப்பில் கரையொதுங்கி வந்த நிலையில், தற்போது அவை மன்னார் கடற்பரப்பிலும் அவதானிக்கப்பட்டுள்ளன. (அ-ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## அமெரிக்காவின் வரிவிதிப்பு 17 சுற்றுப்பேச்சில் இலங்கை

கொழும்பு,நவ.19

அமெரிக்காவுடன் பரஸ்பர வரிகள் தொடர்பாகக் கையெழுத்திடுவதற்கு இலங்கை இதுவரையில் இறுதி உடன்பாட்டை எட்டவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

அதன்படி, இலங்கைக்கும், அமெரிக்காவிற்கும் இடையில் இதுவரையில் 17 சுற்றுப்பேச்சுகள் நடைபெற்றுள்ளன. இதனூடாக இலங்கைக்கான வரிகளை 44 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைக்க முடிந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நவம்பர் 13 அன்று வெளியிட்ட உத்தரவில், இலங்கையால் ஏற்றுமதி செய்யப்பட்ட சில உணவுப் பொருள்களுக்கான வரிகளைப் பூஜ்ஜியமாகக் கொண்டுவந்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

அரச நடன விருது

## 3 விருதுகள் வென்ற பச்சிலைப்பள்ளி

கிளிநொச்சி,நவ.19

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான அரச நடன விருது விழாவில், பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் மூன்று விருதுகளையும், ஒரு திறமைச் சான்றிதழையும் பெற்றுக்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் 5 விருதுகளைப் பெற்றுக்கொண்ட நிலையில் பச்சிலைப்பள்ளி 3 விருதுகளைப் பெற்றுள்ளது. பரதநாட்டியம் தில்லானா போட்டியில் (ஆண் தனி) அ.ஜனார்த்தன் (முகாவில் கலைநண்பர்கள் மன்றம்) முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். புதிய நிர்மாணம் தேர்த்திருவிழாப் போட்டியில் இயக்கச்சி கங்கைத் தமிழ் மன்றம் இரண்டாம் இடத்தையும், கிராமிய நடனம் மயில் நடனம் போட்டியில் இயக்கச்சி கங்கைத் தமிழ் மன்றம் இரண்டாம் இடத்தையும், சாஸ்திரிய நடனம் புஷ்பாஞ்சலி பளை நாட்டிய ஷேஸ்திரா நடனாலயா திறமைச் சான்றிதழையும் பெற்றுள்ளன. (க-இ)

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விரைந்து நீதி வழங்கவேண்டும்

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, நவ.19

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சர்வதேச நீதி விசாரணை மேற்கொண்டு அவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குழுநிலை வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியைக்கோரி அவர்களது உறவினர்கள் வடக்கு, கிழக்கில் மூவாயிரம் நாள்களைக் கடந்தும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது பிள்ளைகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பலநூற்றுக்கணக்கான பெற்றோர் வயது முதிர்வாலும், நோய்வாய்ப்பட்டும் உயிரிழந்துள்ளனர்.

எப்போது இவர்களுக்கான நீதியை வழங்கப் போகின்றீர்கள்? இவ்வாறு அனைவரும் மரணித்த பின்புதான் நீதியை வழங்கப்போகின்றீர்களா? அவ்வாறெனில் அது நீதியாகுமா?

காலம் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமன் என்பதைக் கருத்திற்கொண்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கோரிக்கைக்கு அமைவாக, சர்வதேச நீதி விசாரணையின் ஊடாக அவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சபையைக் கோருகின்றேன்-என்றார். (எ-இ)

**வீடு வாடகைக்கு**

ஸ்ரேசன் வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து 150m தொலைவில் நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.

(CS/59939) J-1

WhatsApp:- +94 77 115 5909

**வீடு வாடகைக்கு**

கைதடி-மானிப்பாய் பிரதான வீதியில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மரதனார் மடம் சந்திக்கும் இடையில்) சகல வசதிகளுடன்கூடிய, நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள மேல்மாடி வீடு (3000 sq.ft) வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(CS/59939) J-1

WhatsApp:- +94 77 115 5909

**வீடு விற்பனைக்கு**

ஸ்ரேசன் வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து 150m தொலைவில், நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

(CS/59939) J-1

WhatsApp:- +94 77 115 5909

**காணி தேவை**

சாவகச்சேரி A9 வீதி ஓரமாக 2 1/2 - 3 1/2 பரப்புக் காணி விலைக்குத் தேவை. (புகையிரத பாதைக்கு எதிர்பக்கமாக)

தொடர்புகளுக்கு:- 077 959 2628

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

## பிரபல வில்லிசைக் கலைஞர் இராஜன் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த பிரபல வில்லிசைக் கலைஞர் தம்பையா இராஜன் ஜேர்மனியில் நேற்றுக் காலமானார்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் பிறந்த இவர் புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டிலும், பின்னர் ஜேர்மனியிலும் வசித்துள்ளார். இவர் இந்திரா பார்த்தசாரதியின் 'மழை' மற்றும் கே.பாலச்சந்தரின் 'மூன்று முடிச்சு' போன்ற நாடகங்களை இயக்கி மேடையேற்றியுள்ளார்.

யாழ்.வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், தாயகத்தில் பிரபல வில்லிசைக் கலைஞர் கலைவாணர் அமரர்.சின்னமணி வில்லிசையில் கோலோச்சியிருந்த காலத்தில் வில்லிசையில் பெரும் புகழ் பெற்றிருந்ததுடன் பின்னர் ஐரோப்பாவிலும் வில்லிசையில் கோலோச்சியிருந்தார். (ம-66)

திருகோணமலையில் அட்டூழியம்;

## கரைச்சிப் பிரதேசசபை கண்டனத் தீர்மானம்!

கொழும்பு,நவ.19

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக கரைச்சிப் பிரதேசசபையில் ஏகமனதாகக் கண்டனத் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருகோணமலையில் சட்டத்துக்கு முரணாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இன்று ஆட்சியில் உள்ள அரசாங்கமும் இனவாதப் போக்கையே கடைப்பிடிக்கின்றது.

இந்தத் தேசம் தொடர்ச்சியாக அபிவிருத்தியை நோக்கி நகரமுடியாமல் இருக்கின்ற மூல காரணம் பௌத்த சிங்கள மதத்தலைவர்களின் மனநிலை என்பது தொடர்ச்சியாக நீறுபூத்த நெருப்பாக இருப்பதே.

திருகோணமலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் இரண்டு இனங்களுக்கிடையில் அல்லது மதங்களுக்கிடையில் ஒரு முரண் நிலையினை உருவாக்கும் எனத் தெரிவித்து சபையின் உறுப்பினர் முத்து சிவமோகன் பிரேரணையை முன்வைத்தார். குறித்த பிரேரணைக்கு ஆதரவாக ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி, சுயேச்சைக்குழு, ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ்க்கூட்டணி, போன்ற கட்சிகளின் உறுப்பினர்கள் தமது கருத்துகளை முன்வைத்தமையைத் தொடர்ந்து குறித்த சம்பவத்துக்கான கண்டனம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ச-113)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 19.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org